www.padippakam.com

AIR MAIL

விலை 3-00 ரூபா

# ஈழ சுதந்திரன்

ELASUTANTIRAN

திருவள்ளுவராண்டு

௨○௨௭

தை-மாசி

பிப்ரவரி 1996

புத்தகம்: 8 இதழ்: 2

ஃ சனநாயகத்தையும் சோசலிசத்தையும்கூடப் புறக்கணித்தது சிங்கள பௌத்தப் பேரினவாதம்!

ஃ இந்திய ஏற்பாட்டைக் குலைப்பதே சந்திரிகாவின் அதிகாரப் பரவல் புதிய நகல் திட்டம்!

ஃ யாழ்ப்பாணப் போருக்குமுன் அறிவித்த திட்டத்திற்கும் இதற்கும் ஏணி வைத்தாலும் எட்டாது!

## தமிழினத்திற்கு எதிரான சந்திரிகாவின்

# சுயரூபம்

### ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் அறிக்கை

இலங்கை அதிபர் சந்திரிகாவின் உண்மையான நோக்கமும், நடவடிக்கையும் சிங்களப் பௌத்தப் பேரினவாதமும், அதைச் செயற்படுத்த எந்தத் தார்மீகநெறிகளையும் சிதைத்துச் சின்னா பின்னப் படுத்துவதே என்பதை, அதிகாரப் பரவல் குறித்த தனது அரசின் சட்டபூர்வ நகல் என்று 16-1-96 அன்று அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கை புலப்படுத்தி விட்டது.

சிறீலங்காவின் நிதி மற்றும் சட்டத்துறை அமைச்சர் பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் அந்த நகல் திட்டம், கடந்த 13 ஆண்டுகளாக உச்சகட்டத்தில் இருந்து வரும் இனப் பிரச்சினையை முடிவுக்குக்கொண்டு வரும் தன்மை வாய்ந்தது என்ற முத்தாய்ப்பு வேறு.

ஃ இதுவரை சனநாயக சோசலிச சிறீலங்கா குடியரசு என்று அழைக்கப்பட்டு வந்தது, இனிசிறீலங்கா குடியரசு என்று மட்டுமே அழைக்கப்படும். சனநாயகம், சோசலிசம் என்ற சொற்கள் நீக்கப்படும்.

### அதிபருக்கு எதேச்சாதிகாரம்

ஃ மாநிலத்தை மாற்றியமைக்கவோ, இரண்டு மூன்று மாநிலங்களை ஒன்றாகச் சேர்க்கவோ, அந்த மாநிலத்திற்குப் புதிதாகப் பெயர் வைக்கவோ அனுமதியில்லை.

ஃ தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பான்மைத் தமிழர்களால் சிங்கள இனத்தவருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படும் நிலையிலிருந்தால், அங்கு நெருக்கடி நிலை அமுல் படுத்தும் அதிகாரம் அதிபருக்கு வழங்கப்படுகிறது.

ஃ இதற்காக அங்கு பாதுகாப்பு நலன்கருதி இராணுவத்தையோ, தேசிய காவல் படையையோ குவிக்க அதிபருக்கு அதிகாரம் உண்டு.

ஃ நாட்டு ஒற்றுமைக்கு எந்தக் குந்தகமும் ஏற்படாத வகையில் எல்லைகள் நிர்ணயிக்கப்படும். அப்போதே அந்த எல்லைக்குட்பட்ட அதிகாரங்களும் என்னென்ன என விளக்கப்படும்.

ஃ மாகாண மன்றத்தை நீக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இருந்தாலும், அதற்கு முன் முதல்வருடன் கலந்து பேசி நடவடிக்கை எடுப்பார்.

### மாநில மன்றத்தின் மதிப்பற்ற அதிகாரம்

ஃ மாகாண முதல்வர் மீது மாகாண மன்றம், நம்பிக்கை இழந்தாலோ, நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வரப் பட்டாலோ முதல்வர் பதவி இறக்கம் செய்யப்படுவார் அல்லது அவர் பதவி விலகி விட வேண்டும்.

ஃ அந்தந்த மாகாணங்களுக்கு நிலம், நீர், சட்டம், ஒழுங்கைக் கவனிக்கும் அதிகாரம் வழங்கப்படும்.

ஃ மாகாணத்தில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டால் அங்கு இராணுவம் குவிக்கப்படும்.

ஃ மாகாண முதல்வர் அம் மாநிலத்தில் காவல்துறை ஆணைக் குழுவை நியமித்துக் கொள்ளலாம்.

ஃ மாகாண போலீஸ் நாட்டுக்கு எதிரான குற்றங்கள் குறித்த புலனாய்வு, இராணுவம், கடற்படை மற்றும் வான்படை, பிரதமர், அதிபர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடக்கும் சதிவேலைகள் குறித்த புலனாய்வை மேற்கொள்ளலாம்.

### அதிகாரங்கள் பகிர்வு 63-46

ஃ மாகாண வளர்ச்சிக்காக உள் நாட்டிலோ, வெளி நாட்டிலோ, அரசு நிர்ணயித்துள்ள அளவுக்கு கடன் பெறும் அதிகாரம் மாகாண மன்றத்திற்கு உண்டு.

ஃ ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண மன்றம் அமைக்கப்படும்.

ஃ மாகாண மன்றத்தை அதிபர் நியமிப்பார்.

ஃ இராணுவம் தேசியப் பாதுகாப்பு, குடியேற்றம், குடியமர்வு. வெளி விவகாரம், விமான நிலையம், துறைமுகம் உள்நாட்டுப் போக்கு வரத்து, தொடர்வண்டி, பங்குச்சந்தை, கப்பற்படை உட்பட 63 அதிகாரங்கள் மத்திய அரசிடமும், சுகாதாரம, கல்வி, வேளாண்மை, மின்சாரம், தொலைக்காட்சி, வாகன உரிமம், மாகாண நீதி மன்றம் உட்பட 46 அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கும் வழங்கப் பட்டுள்ளன.

மேற் கண்டவைதான் சந்திரிகா நகல் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் என ஏடுகள் வெளியிட்டுள்ளன.

இவற்றில் தமிழ் மக்களுக்கு உகப்பானது ஒன்றேனும் உண்டா என்றால் ஏதுவுமில்லை. ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமிழீழம் ஒன்றே அவர்களின் ஏகோபித்த கோரிக்கையாகும். 1977ல் நடந்த தேர்தலில் இதையே தங்கள் தீர்ப்பாகவும் அவர்கள் உலகத்திற்குப் பிரகடனப் படுத்தியுமுள்ளனர்.

எனினும், 1987ல் தமிழ் மக்களுக்காக இந்தியா தலையிட்டு சிறீலங்கா அரசுடன் ஒரு ஒப்பந்தம் காண முற்பட்ட போது, ''முதலில் வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு தமிழ் மாநிலத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை நிலை நாட்ட முடியுமா என்று முயற்சித்துப்பாருங்கள், அது சரிவரா விட்டால் பிறகு ஈழத்தைப் பற்றிச் சிந்திக்கலாம்'' என்று சொன்னதன் பேரில், பலருக்கு இதில் தயக்கமிருப்பினும் பெரும்பாலான ஈழத் தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொண்டனர். இந்திய-இலங்கை உடன்பாடும் கையெழுத்தானது.

### தமிழ் மக்களின் சொந்த அரசு

அந்த ஒப்பந்தத்தின் மிக முக்கிய அம்சம் வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரே தமிழ் மாநிலம்; இலங்கைத் தமிழ் மக்களின் பாரம்பரியத்தாயகம் என்பதாகும். அதற்கேற்ப ஒன்றுபட்ட தமிழ் மாகாணத்தில் ஒரு ஆட்சியையும் ஏற்படுத்தி, அதை நடைமுறைக்கும் கொண்டுவந்தது இந்திய-இலங்கை ஒப்பந்தம். தமிழ் மக்களின் சொந்த அரசை ஏற்படுத்திக் கொடுத்ததுடன்

(12-ம் பக்கம் பார்க்க)



சென்னைக் கண்காட்சியை நடிகை ராதிகா திறந்து வைக்கிறார். அருகில் கழக நிறுவனர், கழகத் தலைவர் ஆகியோருடன் பாடகர் அன்பு செல்வராசா.

ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

www.padippakam.com



''அட்டாலும் பால் சுவையில் குன்றாது; அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்'' —மூதுரை

(பாலினை எவ்வளவு காய்ச்சினாலும் அது தன் இனிய சுவையில் குறைவதில்லை. சங்கினை எவ்வளவு சுட்டாலும் அது வெண்மை நிறமாகவே இருக்கும். அவை போல மேலோர் பொருளற்றோராயினும் மேலோராகவே விளங்குவர். நட்புக்குணம் இல்லாத கீழோரிடத்துக் கலந்து நட்புச் செய்தாலும் அவர் நண்பராகார்.)

## தெளிவு

# அந்த நகல் திட்டம் என்ன ஆயிற்று?

புலிகளுடன் நடந்த பேச்சுவார்த்தை முறிந்து, சந்திரிகா அரசு மீண்டும் முப்படைத் தாக்குதல்களை மும்முரமாகத் தொடங்கிய கையோடு, அதிகாரப் பகிர்வுக்கான ஒரு நகல் திட்டத்தை தன்னிச்சையாக வெளியிட்டது.

''புலிகள் ஒத்துவராவிட்டாலும், தமிழ் மக்களுக்குத் தேவையான சுயாட்சி அதிகாரங்களை நான் கொடுத்து விடுவேன். அவர்களுக்கு எக்குறையும் வைக்க மாட்டேன்'' என்ற பீடிகையுடன் அந்நகல் திட்டத்தை சந்திரிகா வெளியிட்டார்.

அதில் மிகச் சிறப்பான அம்சமாக விளங்கியது ''மாநிலங்களின் கூட்டமைப்பான இறையாண்மையுள்ள சிறீலங்கா குடியரசு'' என்று நாட்டின் பெயரைத் திருத்தும் யோசனையாகும்.

ஆனால், போர் நடந்து, புலிகளை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றிவிட்டோம் என்ற இறுமாப்பில் 16-1-96ல் வெளியிட்டிருக்கும் புதிய நகல் திட்டம் என்ன சொல்கிறது?

''இதுவரை சனநாயக-சோசலிச சிறீலங்கா குடியரசு என்று அழைக்கப்பட்டு வந்த நாடு, இனி சிறீலங்கா குடியரசு என்று மட்டுமே அழைக்கப்படும். சனநாயகம், சோசலிசம் என்ற சொற்கள் நீக்கப்படும்'' என்பதாகும்.

அதாவது ''மாநிலங்களின் கூட்டமைப்பான இறையாண்மையுள்ள'' என்ற வாசகம் கிடையாது என்பதோடு கூட ஏற்கனவே இருந்த சனநாயகமும், சோசலிசமும் கூட இனிக் கிடையாது என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது மட்டுமா ? முந்தைய திட்டத்தில் ''மாநில மன்றத்தின் முதலமைச்சராக இருப்பவரை, அவர் அம்மாநில மன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரை அவரை, நடுவணரசோ, ஆளுநரோ பதவி நீக்கம் செய்ய முடியாது'' என்று இருந்தது.

இப்போதைய நகல் திட்டத்திலோ, மாகாண அரசை நீக்க மத்திய அரசுக்கும், ஆளுநருக்கும் அதிகாரமுண்டு என்று சொல்வதுடன் ''ஒரு மாகாணத்தில் சட்டம் ஒழுங்குப் பிரச்சனை ஏற்பட்டால் அங்கு இராணுவம் குவிக்கப்படும்'' என்றும் கூறுகிறது.

இன்னும் ஒரு படி மேலே போய் ''தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பான்மைத் தமிழர்களால் சிங்கள இனத்தவருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படும் நிலையிருந்தால், அங்கு நெருக்கடி நிலை அமுல்படுத்தும் அதிகாரம் அதிபருக்கு உண்டு'' என்று கூறுகிறது.

இது எந்த நேரத்திலும் தமிழர்கள் தலைமீது தொங்கும் வெடிகுண்டு என்பதில் ஐயமென்ன ?

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் சிங்களரைப் பாதுகாக்க இந்தப் பிரிவு தேவையாக இருக்குமானால், சிங்களர் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் தமிழர்களைப் பாதுகாக்கவும் இது போன்ற பிரிவு தேவையல்லவா ?

அந்தப்பிரிவு இருந்தாலும்கூட இலங்கையின் அதிபராக என்றென்றும் ஒரு சிங்களவரே வர முடியும் என்கிற இன்றைய ஒற்றையாட்சி முறையில் அதனால் தமிழர்களுக்குப் பயன் ஏற்படப் போவதில்லை என்றாலும் கூட, ஒப்புக்கேனும் அது சொல்லப்படவில்லை என்கிறபோது இது முழுக்க முழுக்க சிங்கள பௌத்தப் பேரினவாத ஏகாதிபத்தியத்தைக் காக்கும் திட்டம் என்றுதானே பொருள்?

*அந்த நகல் திட்டம் வெளியானபோதே சொல்லியிருந்தோம் அது உலகை ஏமாற்ற வெளியிடப்பட்ட ஒரு அறிவிப்பு என்பதுடன், வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ளாதவரை, மலையகத் தமிழ் மக்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப் படாதவரை, ஏற்கனவே திட்டமிட்டுத் தமிழ்ப் பகுதிகளில் நடத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்படாதவரை அதனால் எந்தப் பயனுமில்லை என்று ஆதாரப்பூர்வமாக விளக்கியிருந்தோம்.*

இப்புதிய நகல் திட்டம் நாம் அன்று சொன்னது நூற்றுக்கு நூறு உண்மையென்பதை மெய்ப்பித்து விட்டது.

''மாநிலத்தை மாற்றியமைக்கவோ, இரண்டு மூன்று மாநிலங்களை ஒன்றாகச் சேர்க்கவோ, அந்த மாநிலத்திற்கு புதிதாகப் பெயர் வைக்கவோ அனுமதியில்லை'' என்று புதிய நகல் திட்டத்தில் உள்ள பிரிவானது ஏற்கனவே இந்திய-இலங்கை உடன்பாட்டின் பயனாக ஏற்பட்டு விட்ட ஒன்றுபட்ட வடகிழக்கு மாகாணத்தை உருக்குலைக்கத்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

எனவே, இது அவ்வுடன்பாட்டில் கையெழுத்திட்ட இந்தியாவுக்கு விடப்பட்ட சவாலாகும். இந்தச் சவாலை இந்தியா ஏற்று முறியடிக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

''ஒரு மாநிலத்திற்குப் புதிதாகப் பெயர் வைக்க அனுமதியில்லை'' என்பது மக்களின் சனநாயக அடிப்படை உரிமையையே மறுப்பதாகும்.

இஸ்ரேலிலிருந்து பாலஸ்தீன் பிரிந்து விட வில்லை. சில பகுதிகள் சுயாட்சிதான் பெற்றிருக்கின்றன. என்றாலும் அப்பகுதி பாலஸ்தீன் என்றே வழங்கப்பட்டு, அண்மையில் அங்கு தேர்தல் கூட நடைபெற்று, அதன் தலைவராக யாசிர் அரபாத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அதுபோல இலங்கையில் ஏற்படும் தமிழ் மாநிலத்திற்கு என்ன பெயர் சூட்ட வேண்டும் என்பது தமிழ் மக்களின் விருப்பமாகும். அதை மத்திய அரசு தீர்மானிக்க முடியாது. கூடாது. இந்தியாவிலும் கூட எத்தனையோ மாநிலங்கள் தங்கள் பெயர்களை, தங்கள் மக்களின் விருப்பத்திற்கிணங்க பிறகு மாற்றிக் கொண்டிருக்கின்றன. மத்திய அரசும் அதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இங்கே இந்தியாவிலும் சரி; வெளியுலகிலும் சரி; ஈழத் தமிழ் மக்களைப் பார்த்து ஒரு கேள்வி எழுப்புகிறார்கள். ''ஈழத் தமிழ் மக்களின் நலன்கள் பெரும்பாலும் இந்தியாவோடு சம்பந்தப்பட்டிருந்தும் நெருக்கடியான கட்டத்தில் பிரேமதாசாவுடன் கூடிக்கொண்டு, இந்தியாவை வெளியேறச் சொன்ன புலிகளை அவர்கள் ஆதரிப்பது சரியா?'' என்பதே அக் கேள்வியாகும்.

ஆனால், புலிகளிடம் யாழ்ப்பாண ஆதிக்கம் இருந்தவரை சந்திரிகா அரசு தமிழர் பிரச்சினை பற்றிப் பேசிய தொனியும், அங்கு அவர்களை வெற்றிகொண்ட பிறகு பேசுகிற தொனியும் என்ன என்பதைச் சீர்தூக்கிப் பார்த்தாலே இதற்கான பதில் புலனாகும். புலிகள்தான் என்றில்லை தமிழ் மக்களுக்கு அத்தகையதொரு பாதுகாப்புக் கவசம் அவசியம் தேவைப்படுகிறது. அது இல்லையென்றால் தமிழ் மக்களுக்கு இலங்கைத் தீவில் எதுவுமே இல்லை என்ற முடிவுக்குத்தான் சிங்களப்பேரினவாதம் வரும் என்பதற்கு, சந்திரிகா அரசின் இந்த இரு நகல் திட்டங்களே சான்றுகளாகும்.

ஆகவே, இந்தியா அந்தவொரு கேள்வியை எழுப்பிக் கொண்டு, இலங்கைத் தமிழ் மக்களின் நலன்களைப் பேணுவதான தனது தார்மீகப் பொறுப்புக்களைக் கைவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம்.

தமிழர்கள் விடயத்தில் எப்படித் தான் பலவீனமாக இருக்கும் நேரத்தில் பாசமும், பலமுறும் நேரத்தில் மோசமும் செய்வதை சிறீலங்கா அரசு வழக்கமாகக் கொண்டிருக்கிறதோ, அப்படியே இந்தியா விடயத்திலும் அது நடந்து கொள்ளும் என்பதற்கு பாக்கிஸ்தான்-இந்தியா போரின் போதும், சீன-இந்தியப் போரின் போதும் அது நடந்துகொண்ட விதம் சான்றாகும். இந்தியாவிலுள்ள சிந்தனையாளர்கள் இதையும் எண்ணிப் பார்த்து, என்றும் அங்கே இந்தியாவின் உண்மையான நேச சக்தி தமிழ் மக்களே என்பதை மனதிற்கொண்டு அவர்களுக்கு நியாயம் கிடைக்கத் தலையிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

## செய்திச் சரம்

**25—12—1995**

புலிகள் சோர்ந்து தான் போய் உள்ளனர். ஒய்ந்து போய் விடவில்லை பதுங்கியிருக்கும் புலிகள், பாயப் போவது நிச்சயம் என்று இராணுவ கமாண்டர் லெப். ஜெனரல் கேரி டி சில்வா கூறினார். மேலும் அவர் தெரிவிக்கையில் இராணுவத்துக்கு ஆள் எடுக்கும் பணி நடந்தது. 10,000 பேரை எதிர்பார்த்தோம் ஆனால், 13000 பேர் சேர்ந்துள்ளனர் என்று கமாண்டர் டி சில்வா கூறினார்.

(தினமணி, தினமலர், கதிரவன்)

மட்டக்களப்பில் மூன்றுஇடங்களில் மின்சார டிரான்ஸ்பர்மர்களை புலிகள் இன்று அதிகாலல தகர்த்துவிட்டனர். அதனால் பல கிராமங்கள் இருளில் மூழ்கின.

(தினமணி)

ஹாங்காங்கிற்கு 91.73லட்சம் ரூபாய் மதிப்புள்ள வைரங்களை கடத்த முயன்ற இலங்கை ஆசாமியான முகமது யூசுப் என்பவர் பம்பாய் விமான நிலையத்தில் புலனாய்வுத் துறையினர் கைது செய்துள்ளனர்.

(தினமலர்)

வேலூர்முகாமில் இருந்து புலிகள் தப்பிச் சென்றதையடுத்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட போலீஸார் அதிகாரிகள் மீண்டும் வேலைக்கு திரும்புகின்றனர்.

(தினமலர்)

மேலூரிலுள்ள சிறப்பு முகாமிலுள்ள ஐந்து இலங்கை போராளிகளான கதிரேசன், பாலசந்தர், கங்காசிவம், பாலன், சந்திரகுமார் ஆகியோர் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். தனி அறை வேண்டும், சாப்பாடு சரியாக வழங்கப்படுவதில்லை, குடும்பத்தினரை சந்திக்க அனுமதிக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறுகோரிக்கைகளை வலியுறுத்தி இவர்கள் உண்ணாவிரதம் இருந்துவருகின்றனர்.

(தினமலர்)

**27—12—1995**

வட இலங்கையில் புலிகள் இயக்கத்தினர் தாங்கள் பிடித்து வைத்திருந்த இராணுவம்மற்றும் கடற்படை விரர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் பார்த்துப்பேச அனுமதித்துள்ளனர். இந்தத் தகவலை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கூறினார்.

(தினமணி)

மத்தியில் பாரதீய ஜனதா, சிவசேனை தலைமையிலான இந்துத்துவ கூட்டணி ஆட்சி அமைத்தால். புலிகள் மீதான தடை நீக்கப்படும் என்று சிவசேனையின் நாடாளுமன்றக்கட்சித் தலைவர் சதீஷ் பிரதான் நேற்று சென்னையில் நிருபர்களிடம் கூறினார்.

(தினமணி, தினமலர்)

படிப்பகம்

www.padippakam.com






### அடிவயிற்றைக் கலக்கும் நிலை

அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை மூலம் கிளி நொச்சியையும் பிடிக்கப் போறாங்களாம்.

அட சுப்பையாண்ணையே, ...ந்திட்டார். அவரைக் கேட்டால் உள்ளதைச் சொல்லுவார்.

வாங்கோ சுப்பையாண்ணை ...ப்பிடி இருங்கோ.

உவன் என்ற சினேகிதன் பேப்பரில வந்த நியூசைப்பற்றிக் கேட்டான் நல்ல வேளை நீங்களே வந்திட்டியள்.

சரி சொல்லுங்கோ அண்ணை.

தம்பி உந்தச் செய்தி என்னவோ பேப்பரில வந்தது தான்.

அதுமட்டுமே கிழக்கு மாகாணத்திலையும் புலிகள் ஆதிக்கம் கூடிப் போட்டுது அதற்கும் விரைவில் முடிவு காண்போம் என்றெனே அறிக்கை விட்டிருக்கினம்.

தம்பி நான் உனக்கு முடிவும் சொன்னனான் ஒரு அரசாங்கத்திட்ட இராணுவம் எதுவும் செய்யலாம். ஏனென்றால் அவையளுக்கு அவ்வளவு படை பலம் இருக்கு. அதோட, யாழ்ப்பாணத்தைப் பிடிச்ச ருசியில் கிளிநொச்சிக்கு போக பேராசைப் படியினம்.

ஒண்டை நாங்களும் அடிக்கடி மறந்து போறம்.

இண்டைக்கு யாழ்ப்பாணத்தை இராணுவம் பிடிச்சுப் போட்டுது இப்ப என்ன ஆச்சு மக்கள்தான் கஸ்ரப்படுகினம். நாளாந்த உணவு கிடையாது ஒழுங்கான வீடு வாசல்கள் கிடையாது. மருந்துகள் கிடையாது. ஏன் அந்த மக்களைப் பற்றி அக்கறைப் படுபவர்களும் குறைந்துதான் போனார்கள்.

இந்த நிலையில், இந்த இடைவெளி மேலும் தன்னைப் பலப்படுத்திக் கொண்ட இராணுவம் கிளிநொச்சிக்கும் போனால் என்ன என்றா நினைக்கிறது. மக்களும் யாழ்ப்பாணத்தை பிடித்த இராணுவம் கிளிநொச்சியை விட்டு வைக்குமா என்ற கேள்வியில் என்ன செய்வது என்று அறியாமல் திணறுகிறார்கள்.

இராணுவம் புலிகளை அழிக்கிறோம் பிடிக்கிறோம் என உலகுக்கு கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் பிடிப்பது அழிப்பது எல்லாம் அப்பாவி மக்களைத்தான் என்பதை உலகம் அறியாமல் இல்லை.

யாழ்ப்பாணத்தில் சண்டை நடக்கும்போது சண்டை நிற்க வேண்டும் என எழுந்த குரல் எல்லாம் தற்போது அடங்கிப் போய்விட்டது.

மீண்டும் சண்டை தொடங்கும் போது அந்தக் குரல்கள் மீண்டும் உயிர்பெறும். அங்கே தான் நாங்களும் மறந்து போகிறோம்.

சண்டை ஓய்ந்திருக்கும் நிலையிலாவது இரு தரப்பினருக்கும் இடையில் சமாசத்தை ஏற்படுத்த அமைதிக்காக அப்போது குரல் கொடுத்தவர்கள் மீண்டும் இப்போது குரல் எழுப்ப வேண்டும்.

இல்லையேல் ஒட்டுமொத்த தமிழ்மக்களையும் அவர்கள் வரைவிட்டு விரட்டி பட்டினியின் மூலம் சிறிலங்கா அரசு சாவடிக்க போவதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கப் போகிறார்களா என்பதை நினைக்கும் போது எனக்கு அடிவயிற்றை...

# இலங்கைத் தமிழ் அகதி மக்களுக்கு என்றும் பாதுகாப்பாக இருப்போம்

## ஐ. நா. அகதிகள் உயராணையக அதிகாரி சுனில் பகதூர் தாப்பா உறுதிமொழி

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சார்பில் இலங்கைத் தமிழ் அகதி மாணவர்கள் மன்றத்தின் சென்னை மண்டல அமைப்புக்கூட்டம் 18-1-96 அன்று சென்னை புரசைவாக்கத்தில் உள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் காலை 10 மணிக்குத் தொடங்கியது. ஈழப் பண்ணுடனும் கழக பாடல்களுடனும் தொடங்கிய இக்கூட்டத்திற்கு கோயில் பிள்ளை தலைமை வகித்து, அனைவரையும் வரவேற்றார். அவர் தன் தலைமையுரையில் ஜான் கென்னடி சொன்னதை எடுத்துக்காட்டி ''நாடு நமக்கு என்ன செய்தது என்று பார்க்காமல், தாம் நாட்டுக்கு, மொழிக்கு, நமது சமுதாயத்திற்கு என்ன செய்தோம் என்று எண்ணிப்பார்க்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அடுத்து முனைவர் அரு கோபாலன் ஊக்கவுரை நிகழ்த்துகையில் தாம் அமெரிக்கா சென்றிருந்த போது நயகரா நீர் வீழ்ச்சியில் பார்த்த கண்காட்சியை எடுத்துக்காட்டி, ஒருகாலத்தில் அமெரிக்கா எங்கும் நீக்கமற நிறைந்தும் செறிந்தும் மயழ்ந்தும் வாழ்ந்த அம்மண்ணின் உண்மையான மைந்தர்களான செவ்விந்தியர்கள் இன்று பூண்டோடு அழிக்கப்பட்டு, அங்கு காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருப்பதைப்போல ஈழத்தின் மண்ணின் மைந்தர்களான தமிழ் மக்களும் அழிக்கப்பட்டு பின்னொரு காலத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டு விடுவார்களோ என்று அஞ்சத் தக்க வண்ணம் இன்று சிறிலங்கா சிங்களப் பேரினவாத அரசு அவர்களைத் திட்டமிட்டு அழித்து வருகிறது. இலங்கையில் ஆற்றுக்கு ஆறுவிதமும் தமிழ் மக்கள் வாழ்ந்த யாழ்குடா நாட்டிலிருந்தே அவர்கள் வெளியேறும்படி செய்திருப்பது அந்த அச்சத்தைத்தான் தருகிறது. அந்த அச்சம் பலிக்காமலிருக்க வேண்டுமானால், அதற்குரிய விதை நெற்கள் இந்தியாவில் அகதிகளாக வாழும் ஈழத்தின் வருங்கால மன்னர்களான மாணவர்களாகிய நீங்கள் தான். சிதைந்த ஈழத்தைக் கட்டியெழுப்ப, உங்களை நீங்கள் இங்கேகட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

### சுனில் தாப்பா அனிஸ் உதெளலா

சிறப்புப் பார்வையாளர்களாக அக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்த ஐ.நா. உயராணையத்தின் சென்னை அதிகாரிகள் சுனில் தாப்பா, அனிஸ் உதவ்லா ஆகியோரும் பேசினார்கள். அவர்களின் ஆங்கிலப்பேச்சை திருமதி கீதா கல்யாணி தமிழில் பெயர்த்தார். அப்போது தான் சுனில் தாப்பா ''இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நாங்கள் என்றும் பாதுகாப்பாக இருப்போம்'' என்று உறுதி கூறினார். எந்த அகதியையும் அவர் விரும்பாமல் நாட்டுக்கு அனுப்பப்படுவதைத் தடுப்போம் என்று கூறிய அவர், அகதி மாணவர்களுக்கு 12ம் வகுப்புவரை கல்வி கிடைக்க வழி செய்ததைப்போல உயர் கல்வியும் விரைவில் கிடைக்க உழைப்போம் என்று கூறினார்.

அடுத்து, படிக்கும் மாணவர்களுக்கு ஈ.ஏ.ம.க. செய்யும் உதவிகள் பற்றி செல்வி பிரிஜ்ஜெட்டும், மருத்துவ சேவை பற்றி டாக்டர் திருமதி தேவராசாவும், நலப்பணி பற்றி பூங்குன்றனும், அகதிகள் சேவைபற்றி பரமும், சுற்றுச்சூழல் பற்றி காண்டீபனும், ஊட்டச்சத்து பற்றி திருமதி அகிலாவும், ஈழ சுதந்திரன் பற்றி இரத்தின ராசசிங்கமும் எடுத்துரைத்தனர்.

### மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்

பின்னர் செங்கை எம்.ஜி. ஆர். வள்ளலார், இராமசாமியார், சம்புவராயர், அம்பேத்கர் ஆகிய சென்னை மண்டலத்தின் 4 மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்த மாணவ மாணவியர் தங்களுடைய பேச்சு, கவிதை, கட்டுரை, நாடகம், பாட்டு முதலிய நிகழ்ச்சிகளை மிகக் கச்சிதமாகவும் கவர்ச்சியாகவும் நடத்திக் காட்டினார்கள்.

மாலை 4 மணிக்கு கழகப் பொதுச் செயலாளர் செல்வி சூரியகுமாரியும், கழகப் பொருளாளர் சந்திரகாசனும் மாணவர்மன்ற அமைப்புக் கூட்டங்களின் நோக்கம்பற்றியும், அவர்களின் கடமைபற்றியும் விரிவாக விளக்கமளித்தனர். அமெரிக்காவில் வாழ்ந்து சென்னை வந்திருக்கும் ஈழத்துப்பிரமுகர் பேரம்பலம் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டு அம்மாலைக் கூட்டத்தில் மாணவர்களுக்கு அறிவுரை கூறினார். இறுதியாக செல்வன் சா.செ.ச. இளங்கோவன் நன்றி நவில, காலை 10 மணிக்குத் தொடங்கிய கூட்டம் இரவு 7-30 மணியளவில் இனிதே நிறைவெய்தியது பகலுணவும், காலை மாலைத் தேநீரும் கழகத் தொண்டர்களால் மண்டபத்திலேயே வழங்கப்பட்டன.

150க்கும் மேற்பட்ட மாணவர்-மாணவியர் கலந்து கொண்ட இந்த எழுச்சிமிகு கூட்டத்தின் பொறுப்பாளர்களாக உணவு: திருமதி அகிலா, செல்வி பூங்கோதை, செல்வி சரளா, திருமதி கலாவதி, திரு. மார்க், ஞானவேல் ஆகியோரும், போக்குவரத்து: உதயன், அன்பழகன், பெருமாள், நாகராசன், பாபு ஆகியோரும், மண்டபம்: செல்வி வளர்மதி, திரு. குணசீலன் மற்றும் பாக்ட்டுத் தன்னார்வத் தொண்டர்களும், மின்சார மாற்றொழுங்கை உதயனும், அன்பழகனும், ஒலிபெருக்கி: செல்வராசாவும், சுரேஷ் கண்ணனும், செலவினத்தை பிரிஜ்ஜெட், அகிலா பெருமாள், செபஞானசீலன், செல்வரத்தினம், அன்ரனி ஆகியோரும், இசை வொழுங்கைஅன்புசெல்வராசா மாணிக்கவாசகர், சுரேஷ் கண்ணா, பிரிஜ்ஜெட், அகிலா, மாலதி, ரஞ்சினி, அன்பழகன், செபஞானசீலன், மலர்மகள், உதயன், இளங்கோவன், திருச்செல்வம் ஆகியோரும் கடமையேற்றுச் சிறப்பாகச் செய்திருந்தனர். பாடல்கள் சிறக்க திரு. சிவபாலன், திரு. சுந்தரராசன், திரு. க. சரவணன் ஆகியோர் வழி நடத்தி உதவினர்.

## பொது அறிவு வளர்ச்சியில் மாணவர் மன்ற விவாத அரங்கு

சேலம்மாவட்டம், பரமத்தி முகாம் மாணவர் மன்றம், பெரியார் மாவட்டம் அரைச்சலூர் முகாம் மாணவர் மன்றத்தை ''சினிமா தொலைக்காட்சி சமூகத்திற்கு கேடு விளைவிப்பவை'' என்ற தலைப்பின் கீழ் விவாத அரங்கிற்கு அழைத்திருந்தனர். இவ்வுரையை ஏற்று அரச்சலூர் மாணவர்கள் சிலர் 28-12-95ம் திகதி பரமத்தி முகாம் சமூகமளித்தனர். இவ்விவாத அரங்கிற்கு வாதிகளாக (சினிமா தொலைக்காட்சி கேடு'') பரமத்தி முகாம் செல்வி சாந்தகுமாரி, செல்வன் கிங்ஸ்லி, செல்வன் செல்வகுமார் ஆகியோரும் பிரதிவாதிகளாக (''சினிமா தொலைக்காட்சி சமூகத்திற்கு நன்மை)'' அரைச்சலூர் முகாம் மாணவர்கள் செல்வி நளினி, செல்வன் இறஞ்சித்குமார், செல்வன் சுதர்சன் ஆகியோர் பங்கு கொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்து இரு முகாம் மாணவர்களுக்கிடையேயும், பொது அறிவு, பொது விவேகம் போட்டியும் கேட்கப்பட்டது.

இரு முகாம் மாணர்களும் சிறுசிறு கலை நிகழ்ச்சிகள் நடத்தினார்கள். இதனைத் தொடர்ந்து, பொது அறிவுப் போட்டியில் பங்குபற்றியோர் விபரம் வருமாறு:-
01. செல்வி சுபத்திரா - அரச்சலூர், 02. செல்வி நளினி - அரச்சலூர், 03. செல்வி கவிதா - அரச்சலூர், 04. செல்வன், ரஞ்சித்குமார் - அரச்சலூர், 05. செல்வன் ஜெரின் - அரச்சலூர், 01. செல்வன் நவசீலன் - பரமத்தி 02. செல்வன் இலங்கேஸ்வரன் - பரமத்தி, 03. செல்வன் கிங்ஸ்லி - பரமத்தி, 04. செல்வி ஜெயந்தி - பரமத்தி, 05. செல்வி சாந்தகுமாரி - பரமத்தி ஆகியோர் ஆகும்.

## செய்திச்சரம்

21-12-1995

புதுவைக் கடல் பகுதிக்குள் படகுடன் வந்து கொண்டிருந்த நான்கு சிங்கள மீனவர்களான விஜயுதாஸ் (47), சகரனா (28), ஜயஸ்ரீ (30), கோப்புள்ளா (57) ஆகியோரை புதன் அதிகாலையில் மத்திய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

(தினமணி)

நேற்று முன்தினம் மூதூரில் இருந்து சம்பூருக்குசென்று கொண்டிருந்த பஸ்சை போராளிகள் கடத்திச் சென்றனர். அப்போது பயணிகளை பத்திரமாக இறக்கிவிட்டு, பஸ் கண்டக்டர், பஸ் டிரைவரின் கண்களைக் கட்டிவிட்டு அவர்கள் இச்சம்பவத்தில் ஈடுபட்டனர்.

(தினமணி)

தமிழகத்தில் அகதிகள் முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் தங்கள் கைத்திறனைக் காட்டி உற்பத்தி செய்த வீட்டு உபயோகப் பொருள்களின் கண்காட்சி, விற்பனையை நடிகை ராதிகா நேற்று தொடங்கி வைத்தார். ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் இக்கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது. அதன் தலைவர் சந்திரகாசன் அனைவரையும் வரவேற்றார்.

(தினமணி, கதிரவன்)

யாழ்ப்பாணத்தில் இருந்து துரத்தப்பட்ட புலிகள் கிழக்கிலங்கையில் தங்கள் படைப்பிரிவுகளை வலுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளதாக இராணுவம் மற்றும் பொது மக்களிடம் இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன்)

22-12-1995

நேற்று முன்தினம் சுதுமலை எனுமிடத்தில் புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையே நடந்த மோதலில் போராளி ஒருவர் கொல்லப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(தினமணி)

அம்பாறை மாவட்டத்தில் டீசல் டாங்கர் ஒன்றுக்கு புலிகள் தீ வைத்து தகர்த்தனர். டிரைவரையும், அவரது உதவியாளரையும் அவர்கள் சுட்டுக் கொன்றனர். பொலிஸார் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்ற போது, அதில்ஏற்பட்ட மோதலில் ஒரு பொலிஸார் கொல்லப்பட்டார்.

(தினமணி)

பத்து லாரிகளில் உணவு மற்றும் பிற அவசிய பண்டங்கள், அகதிகளுக்கான ஐ. நா. ஹைகமிஷன் அதி[illegible]ரின் பாதுகாப்போடு எடுத்துச் சென்று கிளிநொச்சியில் தங்கியுள்ள தமிழ் மக்களுக்கு அளிக்கப்பட்டன என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(தினமணி)

நேற்று முன்தினம் மாலை புதுக்கோட்டை கடல் எல்லைக்குள் தமிழக மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினர் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில், முருகன் என்ற மீனவர் காயமடைந்தார்.

(தினமலர்)

[illegible]

www.padippakam.com

# ஒரு குறளை உணர்வோம்

## இல்வாழ்வோர் உதவ வேண்டிய இன்றியமையாத மூவர் !

-'அருகோ'-

''துறந்தார்க்கும் துவ்வாத வர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை''

-திருக்குறள்: 37

பரிமேலழகர் : துறந்தார்க்கும்-களைகணாவாரால் துறக்கப்பட்டார்க்கும், துவ்வாதவர்க்கும்-நல்கூர்ந்தார்க்கும், இறந்தார்க்கும்-ஒருவரும் இன்றித் தன்பால் வந்திறந்தார்க்கும், இல்வாழ்வான் என்பான் துணை-இல்வாழ்வான் என்று சொல்லப்படுவான் துணை என்றவாறு.

துறந்தார்க்குப் பாவம் ஒழிய அவர் களைகணாய் நின்று வேண்டுவன செய்தலானும், துவ்வாதவர்க்கு உணவு முதலியன கொடுத்தலானும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின் கண் செலுத்தலானும் 'துணை' என்றார்.

இவை இரண்டு பாட்டானும் (இதன் முதற்பாட்டு ''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை'') இல்நிலை எல்லா உபகாரத் திற்கும் உரித்தாதல் கூறப்பட்டது.

மணக்குடவர் : வருணத்தினையும் நாமத்திலையும் துறந்தார்க்கும், துறவாது நல்குரவாளராய் உண்ணப் பெறாதார்க்கும், பிறராய் வந்து செத்தார்க்கும், இல்வாழ்வான் என்று சொல்லப்படுபவன் துணையாவான் என்றவாறு.

மேற்கூறிய மூவரும் வருண நாமங்களைத் துறவாமையால் ஈண்டுத் துறந்தார் என்று கூறினார். செத்தார்க்கு இவன் செய்ய வேண்டியன புறங்காட்டுய்த்தல் முதலாயின.

இது மேற் கூறியவர்க்கே யன்றி இவர்க்குந் துணை யென்று கூறிற்று.

பரிதியார் : மண், பொன், பெண் இந்த மூன்று வகை ஆசையைத் துறந்தார்க்கும், போன சென்மத்தில் தருமஞ் செய்யாமல் தேகி என்பார்க்கும், இறந்தார்க்கும் இந்த மூவர்க்கும் கிரகஸ்தன் துணையாம் என்றவாறு.

காளிங்கர் : முன் சொன்னவர்களேயன்றி (பிரமசரியம் வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்கிற மரபினையுடைய மூவர்) ஒருதியம் அற்றதால் உடன் துறந்தார்க்கும், கடவுளைப் பற்றி நாணினைத் துறந்தார்க்கும், குடிப்பிறந்தாரால் ஒரோர் காரணத்தினால் வெகுண்டு துறக்கப்பட்டார்க்கும், முற்பிறப்பின் கண் ஏற்றவர்க்கு ஈயாது இறந்த வறியோர்க்கும், கல்வியினால் மிக்கோர்க்கும், அநாதராயிருந்தோர்க்கும் மற்று இல்வாழ்வோன் என்று சொல்லப்படுவானே யாவான் என்றவாறு.

மற்றும் இறந்தவராவார் இவ்வுலகத்தின் கண் வறுமையைக் கடந்து மிக்க செல்வத்தையுடையவர். இவர்க்குத் துணையென்றுமாம்.

டாக்டர் மு.வ : துறந்தவர்க்கும் வறியவர்க்கும் தன்னிடத்தே இறந்தவர்க்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கின்றவன் துணையாவான்.

துறந்தார் யார் என்பதற்கு களைகண்ணாக இருக்கப் பட்டோரால் துறக்கப்பட்டவர் அதாவது ஏதிலியர் என்று பொருள்படுமாறு பரிமேலழகரும்; வருணத்தினையும் நாமத்தினையும் துறந்தார் அதாவது குலத்தையும், நற்பெயரையும் கைவிட்டவர் என்று மணக்குடவரும்; மண், பொன், என்ற மூவாசைகளையும் துறந்தவர்கள் என்று பரிதியாரும்; ஓர் ஊதியம் அற்றதாலும், கடவுள் பற்றிய நாணினை விட்டதாலும், ஏதேனும் ஒரு காரணத்தால் ஆத்திரங்கொண்டதாலும் துறந்தவர்கள் என்று காளிங்கரும், பொருள் காண்கின்றனர்.

அதேபோல் துவ்வாதார் யார் என்பதற்கு நல் கூர்ந்தார் என்று பரிமேலழகரும்; துறவாது நல்குரவாளராய் உண்ணப் பெறாதார் என மணக்குடவரும்; போனசென்மத்தில் தருமஞ் செய்யாமல் தேகி என்பார் எனப் பரிதியாரும்; முற் பிறப்பில் ஈயாது இறந்தவறியோர் எனக் காளிங்கரும் பொருள் காண்கின்றனர்.

அதைப் போலவே இறந்தார் என்பதற்கு ஒருவருந் இன்றித் தன்பால் வந்திறந்தார் என்று பரிமேலழகரும்; பிறராய் வந்து செத்தார் என மணக்குடவரும்; இறந்தார் என்றே பரிதியாரும்; அநாதராய் இறந்தோர் என்று காளிங்கரும் பொருள் காண்கின்றனர்.

இங்கே துறந்தார் என்பதற்கு ஏதிலியர் அதாவது அகதிகள் என்ற பொருள் வருமாறு கூறியுள்ள பரிமேலழகர் உரை நற் காலத்திற்கு மிகவும் பொருந்துவதாக இருப்பதையும்; 'துவ்வாதார்' என்பதற்கு நல்கூர்ந்தார்-வறுமை வாய்ப்பட்டோர் என்று உரையாசிரியர்கள் சொல்லும் பொருளைக் காட்டிலும், குமுகாயத்தால் தாழ்த்தப்பட்டோர்-ஒதுக்கப்பட்டோர்-ஒடுக்கப்பட்டோர் எனப் பொருள் காண்பதே சிறப்பாக இருப்பதையும்; 'இறந்தார்' என்பதற்கும் தமது ஆற்றல் வரம்புகளை மறந்து சாதனை படைக்கப் போய்த் தம்மை அழித்துக்கொண்டு, தம்மை நம்பி வந்தோரை ஆதரவற்றவர்களாய் விட்டுச் சென்றோர் எனப் பொருள் கொள்வதே சிறப்பாக இருப்பதையும் காணலாம். அத்துடன் 'துறந்தார்' என்பதற்கு ஒரு கொள்கைக்காக-குறிக்கோளுக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டோர் என்றும் பொருள் காணலாம்.

ஆக, உண்மையான இல்வாழ்க்கையை மேற்கொண்டோர் என்பார் பொதுமை நலன் வேண்டி ஒரு கொள்கைக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு உழைப்போருக்கும்; அரசாலும் குமுதாயத்தாலும் வஞ்சிக்கப்பட்டு, அதனால் தாழ்த்தப்பட்டோராய் ஒதுக்கப்பட்டோராய்-ஒடுக்கப்பட்டோராய்ப் புறக்கணிக்கப்பட்டிருப்போருக்கும்; புதிய சாதனைகளைப் படைக்கப் புறப்பட்டு, அதிலேயே தம்மை அழித்துக் கொண்டு, தம்மை நம்பியிருந்தோரை அனாதைகளாய் விட்டுச் சென்றோருக்கும் உரிய துணையாக இருக்கக் கடமைப் பட்டவர்கள் என்பதே இக் குறட்பா மூலம் வெளிப்படும் வள்ளுவரின் உள்ளம் என்று கொள்ளலாம்.

## தூக்கு கயிற்றில் இயற்கை

வி. ஜெயசக்திவேல்
(இ. அ. முகாம, பரமத்தி)

விடிந்த அந்தக் காலைக் கருக்கலில் மார்கழிப் பனி அதிகமாகவேயிருந்தது. விளக்கின் வெளிச்சம் இருட்டோடு ஒன்றிப் போயிருந்தது. அன்றும் வழமை போலவே ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்து வழமையான காலைக்கடனை முடிப்பதற்காக ரோட்டுக் கரையில் இருந்த சில மரங்களுக்குப் பின்னால் போய் வந்து கால்களில் போட்டிருந்த தேய்ந்து போன செருப்புக்களில் ஒட்டியிருந்த மலத்தினை தண்ணீர் ஊற்றிக் கழுவிக் கொண்டிருந்தான் குமார். அந்தப் பனிக்குளிரில் கறுப்புருவமாய் சில மனிதர்கள் குந்தியிருப்பார்கள். அதில் ஒருவராய் நடுங்கிக் கொண்டாலும் அந்த நேரத்தைத்தான் குமார் எடுத்துக் கொள்வான்.

அந்த அகதி முகாமில் மலசலகூட வசதிகள் இல்லாததால் காடுகள் தொலைவில் இருப்பதாலும், நடந்து சென்று திரும்புவதற்கான தூரங்களை நினைத்து தார் வீதிக்கு அருகில் சிகரட்ஒன்றை ஊதிக்கொண்டு நேரம் பார்த்துப்போய் குந்தி விடுவான். மிருகங்கள் மாதிரி மனிதர்களும் மலசலம் விடுவதற்கு இருந்திருந்தால் ஒரு வேளை வித்தியாசம் தெரியாமல் போய்விடுமோ கடவுளுக்கு என்று சில வேளைகளில் சிந்தனை தோன்றும்.

குந்தியிருக்கும் போது ''லைட்டு'' அடித்துக் கொண்டு சிலர், ''லைட்டு'' இல்லாமல் சிலர் அவன் குந்தியிருக்கும் பக்கம் வந்தால் அவனையறியாமல் அவர்களை வாய்க்குள் சரமாரியாக திட்டிக்கொள்வான். ஒரு வேளை இவன் கையில் ''லைட்டு'' இருந்தால் குந்தியிருப்பதை ''லைட்டு'' மூலம் ''சிக்னல் லைட்டு'' மாதிரி விட்டு விட்டு எரிய வைப்பான். அப்படியிருந்தும் வருபவர்கள் சிலர் பார்த்து விலகிச் சென்றாலும், வேண்டுமென்றோ அல்லது அடக்கமுடியாத வலியினாலோ அவன் பக்கமே யாரும் வந்தால் மனதுக்குள் திட்டிக்கொண்டே எழுந்து தள்ளிப் போய்விடுவான்.

காலையில் அந்த இருட்டுப் பொழுதில் மலங்கழிக்கப் போகத் தவறி ஒரு வேளை தூக்கத்தால் விடிந்தபின்னர் செல்ல நேரிட்டால் அன்று முழுவதும் குமாருக்கு விடியாத மாதிரியேயிருக்கும். யாருடனும் நன்றாகப் பேசாமலும், ''மூட் அவுட்'' ஆகிய நிலையிலிருப்பான். அன்றைக்கென்று அடிக்கடி மலம் வருவது போன்ற உணர்வு

சிறுகதை

தோன்றிக்கொண்டேயிருக்கும். முகாமுக்கு முன்னால் எப்பொழுதும் மக்கள் கூட்டமாக இருக்கும் நேரங்கள் அதிகம். அவர்களைத் தாண்டி தண்ணீர் வாளியை தூக்கிக் கொண்டு போகும் கூச்சத்தில் அடக்கியே வைத்துக்கொள்ள முயற்சிப்பான். மீறினால் அவன் முகமே கறுத்து கோபங்கள் கொப்புளிக்கும். வயிற்றுளைவு ஏற்படும் நேரத்தில் முதலுதவியாக ஓடிப்போய் முகாம் ஹெல்த் வேர்க்கரிடம் மஞ்சள்மாத்திரையை இரண்டு வேளைக்கு வாங்கிவந்தாலும் ஒரே வேளையில் வாய்க்குள் போட்டுவிடுவான். அன்றைக்கு எதுவுமே சாப்பிட மாட்டான். பக்கத்து வீட்டுவின் பையன்மலங்கழிப்பதற்கு சைக்கிளில் தண்ணீர் வாளியோடு போவதைப் பார்க்கும் குமாருக்கு எனக்கும் ஒரு சைக்கிளிருந்தால் எப்படியிருக்கும் என்று நினைத்துக் கற்பனைப்படுவான்.

முகாமுக்கு வரும் அதிகாரிகளிடம் முன்னாடிப்போய் ''சார் எங்களுக்கு மலசல கூட வசதி செய்துதாங்க'' என்பதெல்லாம் குமாருக்கு முகாமுக்கு வந்து ஐந்து வருடமாக சலித்துப் போன மனப்பாடச் சொல்லாக மாறிவிட்டிருந்தது.

பெரிய அதிகாரிகள் போனபின்னர் சின்ன அதிகாரிகள் அவனைப் பார்த்து

''எம்பா இந்திய மக்களுக்கே அந்த வசதியில்ல. உங்களுக்கெப்படியப்பா செய்யப் போறாங்க'' என்று சொல்லும் போது

''இல்லை சார். இந்திய மக்களின்ற பிரச்சனையையும், அகதிகளின்ற பிரச்சனையையும் ஒன்றாக நெனைச்சுப் பேசாதிங்க சார் அகதி முகாம்களில சனத்தொகை யதிகமாகயிருக்கிறதால் சுத்தம் சீக்கிரமே மாசடைஞ்சிடும் சார்.''

அவனுக்கு மனசுக்குள் உள்ள எல்லாவற்றையும் சொல்வதற்கு முடியாது. நிலம் மாசடைவதைப் பற்றி இன்று யார் நினைத்துப் பார்க்கிறார்கள்?

''இப்படிப் போனா 2000த்தில் உலகமழியுது என்று சொல்வது நடக்கத்தான் போகுது'' என்று பக்கத்திலிருந்த ஒரு மாணவனிடம் கூறிக்கொண்டே சென்றான்.

ஒரு நாள் தன் பக்கத்தில சில கஜதூரங்களுக்கப்பால் ஒரு கறுப்புருவம் குந்திக் கொண்டிருந்தது. இவன் மனதுக்குள் திட்டிக்கொண்டே திரும்பி குந்திக் கொண்டான். திருச்செங்கோட்டு தார் வீதியில் செல்லும் வாகனங்கள் இந்த உருவங்கள்மேல் ஒளிஉமிழ்ந்து கொண்டே செல்லும். அப்பொழுது உருவங்கள் கண்ணை மூடிப் பால்குடிப்பதுபோல் கண்ணை மூடிக்கொள்ளும் அல்லது தலையைக் கவிழ்ந்துக் கொள்ளும்.

மலங்கழித்து முடிந்த அந்த உருவம் தார் வீதிக்குச் சென்று அதைக்கடந்து முகாமுக்குச் செல்லும்போது எதேச்சையாக வந்த லாறியின் வெளிச்சத்தில் உருவமும் வெளிச்சமாயின. அது யாருமல்ல ஒரு அகதிப்பெண் நிலவுக்கேயேற்பட்ட தற்கொலையது. உமிழ்ந்த வெளிச்சத்தை உறிஞ்சிக் கொண்டே லாறி சென்று விட்டது.

ஒன்னுக்கு வந்தால்கூட ஒரு பெண் வீதியில் சென்றகல பொறுத்திருந்து விட்டுப்போன பின்னர் மரங்களுக்கிடையில் இருக்கும் ஆண்களில், இவன் விதிவிலக்கா. இன்று முகாமில் பெண்கள் சேர்ந்து இருட்டில் மலங்கழிக்க முந்திக் கொள்ளும் காட்சிகள் குமாருக்கு எல்லாமே முரண்பாடாகத் தெரிந்தது. இருட்டிலும் மலங்கழிக்க இருக்கும் இடைஞ்சலை நினைத்துக் கவலைப்பட்டான். அன்றிலிருந்து உருவங்கள் யாராவது குந்தியிருந்தால் திசை மாறிச் சென்று விடுவான்.

எத்தனை தடவை வெளிச்சத்தில் அவனை...

www.padippakam.com



### வடக்கிலிருந்து வரும் மக்கள் எண்ணிக்கை நாளும் அதிகரிப்பு

# வவுனியா தற்காலிக முகாமில் இட நெருக்கடி; பயணிகள் வெட்டவெளியில் தஞ்சம்

வடபகுதியில் இருந்து நாட்டின் தென் பகுதிக்கும், திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளுக்கும் செல்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இவர்களை சோதனை செய்து அனுப்புவதற்கென வவுனியாவில் 2 முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் முகாம்களை திறக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம் எனத் தெரிகிறது.

வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகில் ஒரு முகாம் திறக்கப்பட்டுள்ளது. இதில் தற்போது 314 குடும்பங்களைச் சேர்ந்த 413 பேர் தென்பகுதி மற்றும் மட்டக்களப்பு திருகோணமலை பகுதிகளுக்கு அனுமதி பெற்றுச் செல்வதற்கு தங்கியுள்ளனர்.

*பகலில் வெயில்*

*இரவில் பனி*

இரண்டாவது முகாம் சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் திறக்கப்பட்டுள்ளது. இங்கு 418 குடும்பங்களைச் சேர்ந்த 645 பேர் அனுமதி பெறுவதற்காக காத்திருக்கின்றனர்.

இரு முகாம்களிலும் 732 குடும்பங்களைச் சேர்ந்த 1058 பேர் தங்கியுள்ளனர்.

நாளுக்கு நாள் முகாம்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் முகாம்களில் சுகாதார வசதிகள் குறைவாக உள்ளன. தங்கி இருப்பதற்கும் இரவில் உறங்குவதற்கும் இடவசதி பற்றாக்குறையாக உள்ளது. இரவில் வெட்டவெளியிலும், மரங்களின் கீழும் உறங்க வேண்டியுள்ளது. இரவில் கடும் பனி பெய்வதனால் குளிரினால் நடுங்குபவர்களையும் காணக்கூடியதாகவுள்ளது.

*யானைப் பசிக்கு சோளப்பொரி*

முகாம்களுக்கு வந்து தங்குபவர்களுக்கு அவர்கள் முகாமைவிட்டு வெளியேறும் வரை மூன்று நேரமும் அரசியினால் சமைத்த உணவு வழங்கபடுகிறது.

வளர்ந்தவர்களுக்கு ஒரு நாளைக்கு மூன்று நேரமும் 25 ரூபா பெறுமதியான உணவும் 12 வயதுக்கு குறைந்தவர்களுக்கு ஒரு நாளைக்கு மூன்று நேரமும் 15 ரூபா பெறுமதியான உணவுமே வழங்கப்படுகிறது.

இந்த உணவு போதுமானதாக இல்லையென முகாமில் தங்கி இருப்போர் வவுனியா அரச அதிபர் கே. கணேஷிடம் முறையிட்டதையடுத்து அவர் மேற்கொண்ட நடவடிக்கையால் தற்போது வளர்ந்தவர்களுக்கு ஒரு நாளைக்கு மூன்று நேரமும் 45 ரூபா பெறுமதியான உணவும் 12 வயதுக்கு குறைந்தவர்களுக்கு 25 ரூபா பெறுமதியான உணவும் வழங்கபபடுகிறது.

இதேவேளை வடபகுதியில் இருந்து வவுனியா வருவோரை விரைவில் ஏனைய இடங்களுக்கு அனுமதி வழங்கி அனுப்புவதில் புதிய நடைமுறையை அரச அதிபர் காரியாலயம் அறிமுகப்படுத்தி வருகிறது.

*வகைப்படுத்தி அனுப்பும் முறை*

வவுனியா வருவோரில் அனுமதி வழங்குவதற்காக முதலில் நோயாளிகளும், அடுத்து வெளிநாடு செல்வோர், புலமைப்பரிசில்பெற்றுச் செல்வோர், கல்வி உயர் கல்வி வாய்ப்பு பெற்று செல்வோர், நேர்முகப் பரீட்சைக்கு செல்வோர் எனவும் மூன்றாவதாக கடமையின் நிமித்தம் செல்லும் அரச, தனியார் ஊழியர்கள், தென்பகுதியில் பதிவுகள் இருந்து வடபகுதியில் உறவினர்களைச் சென்று பார்த்து விட்டு வருபவர்கள், அடுத்து தென்பகுதியில் பதிவுகள் எதுவும் இல்லாது செல்வோர் என வகைப்படுத்தப்பட்டு அரச அதிபர் காரியாலயத்தால் பதிவு செய்யப்படுகின்றனர்.

இந்த வகையில் வகைப் படுத்தப்பட்டு அரச அதிபர் காரியாலயத்தால் பதிவு செய்யப்படுகின்றனர்.

இந்த வகையில் வகைப் படுத்தப்பட்டவர்களை முன்னுரிமையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபர் ஆலோசனை கூறியுள்ளார்.

*அசௌகரியங்கள்*

தற்போதுஅனுமதிவழங்குவதில் பல அசௌகரியங்கள் நிகழ்கின்றன எனவும், மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியாவிற்கு தினமும் 250 பேர் முதல் 275 பேர் வடபகுதியில் இருந்து வந்து சேருகின்றனர். ஆனால் தினமும் சராசரியாக 100 பேர் வரையில் மட்டுமே அனுமதி வழ்ங்கி அனுப்பப்படுகின்றனர்.

வந்து சேருபவர்களுக்கு ஏற்ப வெளியே அனுப்பப் படாமையால் தங்குவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தினமும் இவ்வாறு அதிகரித்தால் மேலும் பல தற்காலிக முகாம்களை திறந்து அவர்களைபராமரிக்க வேண்டியேற்படும் எனவும் அரச அதிபர் புனர்வாழ்வு அமைச்சுக்கு தெரிவித்துள்ளார்.

*அரச அதிபர் வேண்டுகோள்*

வடபகுதியில் இருந்து இடம் பெயர்ந்த அகதிகளுக்கு நிவாரணப் பொருள்கள் தேவைப்படுவதாக அரச அதிபர் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் கூட்டமைப்புகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

என்.ஜீ.ஓ.கொன்சோட்டியம் ஆகிய அமைப்புகளிடம் நிவாரணப் பொருள்களை அனுப்பி உதவுமாறும் அவர் கேட்டுள்ளார்.

## வாழைச்சேனையில் வேட்டு சத்தங்கள்

தொடர்ச்சியாக அரை மணிநேரம் கேட்ட துப்பாக்கி வேட்டுச்சத்தங்களால்வாழைச் சேனை பிரதேசம் வெள்ளியன்று இரவு பெரும் பதற்றத்திற்கு உள்ளானது.

ஆரம்பத்தில் ஒரேயொரு வேட்டுச்சத்தம் கேட்டதைத் தொடர்ந்து நாலாதிசைகளிலும் சரமாரியான வேட்டுச் சத்தங்கள் கேட்க ஆரம்பித்தன.

அரை மணி நேரம் வேட்டுக்கள் கேட்டதால் வீடுகளில் இருந்த மக்கள் பெரும் அச்சத்திற்கு உள்ளாகினர்.

இடையிடையே கிரனைட் வெடிக்கும் சத்தமும் கேட்டது.

மறுநாள் காலை துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் இளைஞரின் சடலமொன்று ப.நோ.கூ. சங்கத்திற்கு அருகாமையிலுள்ள பொலிஸ் காவலரணுக்கு அருகே கிடைக்கக் காணப்பட்டது. ரீஷேர்ட் அணிந்த நிலையில் இச்சடலம் கிடந்தது.

இச்சடலம் பின்னர் வாழைச்சேனை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப் பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஈழத் தமிழர்களின் அழிவினால் உலக அமைதியே ஒழியப்போகிறது!

### அறிஞர் சாலையார் நெருப்பு எச்சரிக்கை

இலங்கை நாடு விடுதலை பெற்ற 1948 ஆம் ஆண்டிலிருந்தே,-அங்குள்ள தமிழர்கள் தங்கள் மொழி உரிமை, இன உரிமை, பண்பாட்டு உரிமை போன்றவைகளுக்காகப் போராடி வருகிறார்கள். அமைதியாக நடத்துவந்த அந்த உரிமைப் போராட்டத்தைக் கொடிய அடக்குமுறைகளால் சந்திக்கப் புறப்பட்ட இலங்கை அரசு 1983- தமிழர்கள் தங்கள் போராட்டத்தையே ஆயுதப் போராட்டமாக மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. அது தொடங்கி,- போராளிகளைச் சந்திக்காமல், தமிழ்ப் பொது மக்களைக் கொன்று குவிப்பதிலும், அவர்கள் வாழ்விடங்களையும் வழிபாட்டு இடங்களையும் இடித்து நொறுக்குவதிலுமே அந்த அரசு தன்னுடைய வீரத்தைக் காட்டி வருகிறது. பக்கத்தில் உள்ள இந்தியஅரசு தனக்கு ஆதரவாக இருக்கிறது என்ற எண்ணத்தில் இலங்கை அரசு, இந்தப்படுகொலைகளை எந்தவிதமான அச்சமும் தயக்கமும் இன்றிநடத்திக்கொண்டு இருக்கிறது.

உலகத்தின் பலநாடுகளில் இன உரிமைப்போராட்டங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அங்கெல்லாம் தலையிட்டும் அமைதிக் காப்புப் படைகளை அனுப்பியும் அழிக்கப்படும் அப்பாவி மக்களுக்கு உலக நாடுகள் அவை பாதுகாப்பு அளிக்கிறது. ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை உலகநாடுகள் அவையும் மவுனம் சாதிப்பதால் சிறீலங்கா அரசு தனது அநாகரிகத் தாக்குதல்களை நிறுத்தாமல் தொடர்கிறது.

இந்தியா மற்றும் உலக நாடுகள் அவையின் இந்தப் புறக்கணிப்பு நடவடிக்கைகளால் ஈழத் தமிழ் மக்கள் மொத்த மொத்தமாக அழிகிறார்கள். அதைவிட, ''இந்த மக்களின் பரம்பரையினரும் அவர்களோடு இன உறவு உடைய இந்தியத் தமிழகத்து ,தமிழர்களும் எதிர்காலத்தில் இந்திய அரசாங்கத்தையும் உலக நாடுகள் அவையையும் எந்த நல்ல காரியத்துக்கும் நம்ப மாட்டார்கள்'' என்பது தான் மிகப்பெரிய வேதனையாக உள்ளது. அண்டையில் உள்ள பெரிய நாடும் அனைத்துலக அவையும்,-துடிதுடிச்சுச் சாகும் இன்றைய ஈழத் தமிழர்களுக்காகக் கவலைப்படாவிட்டாலும் தமிழினத்து எதிர்கால மக்கள் கொதிப்பும் குரோதமும் உள்ள மனிதக் கூட்டமாக உருவாகி, உலக அமைதிக்கே நிரந்தரமான தலைவலியாகி விடுவார்களே என்பதைக்கருத்தில் கொண்டாவது அளவு மீறிய கொடுமைகளில் நீந்தித் திளைக்கும் சிறீலங்கா அரசைக் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும்.

### "ஈழசுதந்திரன்" மாத இதழ் சந்தா விவரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தாசேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம் :

நிர்வாகி
"ஈழசுதந்திரன்"
14, சேட். காலனி முதல் தெரு,
மூன்றாம் மாடி.
எழும்பூர், சென்னை-600 008.

## சத்துணவு மேன்மையில் மாணவர்கள் பங்கேற்பு

சென்ற 27-12-95இல் பவானி மண்டலத்திற்குட்பட்ட முகாம்களுக்காக சத்துணவு மேன்மை பற்றிய கலந்துரையாடல் பவானியில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் மாணவர் மன்றங்கள் கூடுதலாகக் கலந்து கொண்டு சிறப்பாக பங்காற்றினர்.

இக்கலந்துரையாடலின் இடையே பரமத்தி முகாமைச் சேர்ந்த பத்து வயதுக்குட்பட்ட மூன்று சிறுவர் சிறுமிகளால் அகதிகளின் நலனை பிரதிபலிக்க வேண்டிய முறை இரண்டு சிறிய நாடகமாக நடாத்திக் காட்டப்பட்டது. இந்நாடகங்கள் பலரையும் கவர்ந்திருந்தது.

இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்

(6ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

# சூழலில் ஓர் கண்ணோட்டம்

சூழல். ஆம்! சூழல் என்றால் என்ன? தம்மை மட்டும் சூழ்ந்திருப்பவை சூழல் அல்ல. நம் நாட்டையும் சூழ்ந்திருப்பவையே சூழல் ஆகும். அன்று ஆம்ஸ்ரோங் படம் எடுத்தார் பூமியை, அதில் தெரிந்தது பச்சை வெல்வெட் துணிபோல் வனங்கள், இன்று படம் எடுத்தால் பூமியில் தெரிவது மண்டை ஓடு போல் பாறைகள். இம் மாற்றத்திற்கெல்லாம் காரணவாதி யார்? இயற்கையா இல்லை மனிதன் தான். மனிதன்எனும் சுயநலப் பேயின் தாண்டவத்தினால் தெரிவதே அந்த பாறை எனும் மண்டை ஓடு. அவன் தன் சுயநலத்தை சிறிதே விட்டு பொது நலமுடன் வாழ்வானாயின் உலகையே வாழ வைப்பான்.

''தீயதும் நன்றும் பிறர்தர வாரா''
எனவே ஆக்கத்திற்கும் அழிவிற்கும்
அவனே காரணமாவான்.

### நிலம் மற்றும் நீரில் ஓர் இரசாயனப் புயல்

''இரு புனலும் வாய்ந்த மலையும் வரு புனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு''
இவ்வாறு கூறுகின்றது வள்ளுவம். நீர், நில வளமே ஓர் நாட்டின் முக்கிய அம்சமாகும்.

புவியை இன்று நோக்கினால் காடுகள் இருந்த நிலம் நாடுகளாக மாறிவிட்டது. வானளாவிய சோலைகள் இருந்த இடம் விண் முட்டும் கட்டடங்களாக மாறிவிட்டன. பசுமை தவழும் பச்சை புல் வெளியில் இன்று புழுதி பறக்கின்றது. காரணம் என்ன? பெருகி விட்டது மக்கட் தொகை, வந்து விட்டது பொருளாதார நெருக்கடி. காட்டை அழித்தான் கோட்டை கட்டினான், வயல் வெளியே தொழிற்சாலைகள் கட்டினான் இதன் கழிவை அங்கேயே விட்டான் இதனால் பசுமை நிலம் பாலை நிலமானது, பாலை நிலத்தில் நிலத்தடி நீர் வற்றியது.

''நீரின்றி அமையாது உலகு''
என்பது முது மொழிகளுள் ஒன்று. இன்று நீர் இருந்தும் பயன்படாமல் போய் விட்டது. காரணம் ஊரின் நடுவே ஓர் குளம் அதிலே துணியைத் துவைத்தான். கால்நடையை குளிப்பாட்டினான். அதில் கலக்கப் பெற்றது மாசு, சில நாட்களில் அங்கு நீரில்லாத் திண்டாட்டம், எனவே பயன் படுத்தப் பழக வேண்டும். நீர் தூய்மை காக்க அறிய வேண்டும்.

நகர் அருகே ஓர் பெரிய ஆறு அதிலே கலக்க விட்டான் தொழிற்சாலைக் கழிவுகளை தன்மை இழந்தது தண்ணீர் மட்டுமல்ல தானியமும் தான்.

''புறத் தூய்மை நீரினால் அமையும்''
நீரே தூய்மை இல்லாத பொழுது புறத்தூய்மை எவ்வாறு அமையும்? ''மலைவளம் பெருகின் மழை வளம் பெருகும்'' மலையின் வளமாகிய காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். தன் தேவைக்காக ஒரு மரம் வெட்டினால் இரு மரம் நட வேண்டும். மழை நீரைத் தேக்க அணை கட்டுகிறான். காடுகள் அழிவதால் அணையில் தங்கும் மண்ணின் அளவு நீரின் அளவைவிட அதிகமாகிறது.

''காடு செழிப்பின் நாடு செழிக்கும்''

### நடுவானில் ஓர் நாகசாகி :-

நாகசாகி என்றவுடன் நினைவிற்கு வருவது அணு குண்டு. அன்று இக்குண்டினால் அழிந்த இடத்தில் புல் கூட முளைக்கவில்லை. காரணம் இன்றும் அங்கு அணுக் கதிர்வீச்சு நிகழ்கின்றது.

மக்களின் தேவை பெருகிவிட்டது. தனது வசதிக்காக ஓர்வீட்டில் நான்கு கார், அவற்றில் இருந்துவரும் கரிய மிலவாயு புவியின் அடிப்பரப்பில் தங்குகின்றது. இதனால் புவிப்பரப்பில் அழுத்தம் அதிகரித்து வெப்பம் அதிகரிக் கின்றது. இது தொடர்ந்தால் துருவப் பனிமலைகள் உருகி விடக்கூடும். குளிர்மை அனைவரும் விரும்பும் ஒன்று எனவே நம் மூதாதையர் மட்பாண்டத்தில் நீர்வைத்துப் பருகினர். இன்று அது போதாது என்று கண்டு பிடித்தான் குளிர்சாதனப்பெட்டியை, அது கொடுத்தது குளிர்மையை மட்டுமல்ல வெப்பத்தையும்தான். ஆம்,

இதில் இருந்து வெளியேறும் ஃபிரியான் வாயு வான வெளி அரணாகிய ஒசோனில் துளை இடுகின்றது. இதனால் சூரியனின் கதிர்வீசல் புவியினை நேரடியாகத்தாக்குகின்றது இது அணுகுண்டைப்போல் பலமடங்கு அழிவை தோற்று விக்கும்.

புகை இலைப் புகை இல்லையேல் வாழ்வு இல்லை என்றாகிவிட்டது பல மாந்தர்க்கு, இப்புகையினால் தாக்க மடைவது அவன்மட்டுமா இல்லை அயலவரும் தான். ஆம் புகைபிடிப்பவரைவிட அருகில் இருப்பவருக்குத்தான் ஆபத்து அதிகம். திரை அரங்கில் இடைவேளை நேரத்தில் பாருங்கள் எங்கும் ஒரே புகை மயம். இதில் உள்ளது பென் சோபைரின் எனும் நச்சுவாயு. இதனால் பாதிக்கப்படுவது வயோதிகர் மட்டுமல்ல சிசுவும்தான்.

### அறிவியல் எனும் இருமுனைக் கத்தி:-

அறிவியல் இன்று இருமுனையும் கூராகத் தீட்டப்பட்ட கத்திபோல் உள்ளது. ஒரு புறம் ஆக்கத்திற்கும், மறுபுறம் அழிவிற்குமாய் உள்ளது. அணுவைப் பிளந்தான் சக்தியைப் பெற்றான். அதன் மூலம் உலகையே வளர்க்கின்றான். மறுபுறம் அணு குண்டை பிளக்கின்றான் உலகையே அழிக்கின்றான். இதன் கதிர்வீச்சு உயிரியல் மரபான ஜீனின் கட்டமைப்பைமாற்றிவிடும் இதனால் பரம்பரை அங்கவீனம் தோன்றக்கூடும் போபால் விஷவாயுவும் ஓர் அறிவியல் அங்கம்தான். விளைச்சலைப் பெருக்க செயற்கை உரம், களைக்கொல்லி கண்டு பிடித்தான், இவற்றின் மூலம் விளை நிலங்கள் தரிசாகின்றன. காரணம் பூச்சிகொல்லி இடுவதால் நிலங்கள் நச்சாகின்றன. அவற்றில் விளையும் தானியமும் நச்சாகின்றது. அவற்றை உண்ணும் மனிதன் பாதிப்படை கின்றான்.

### காப்போம் தூய்மை:-

''மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்'' என்பது வள்ளுவரின்
வாக்கு. அரண் என்பது தம்மை பாதுகாப்பதற்கு அமைக்கும் ஓர் அமைப்பாகும். உலகைக் காக்கும் அரணாக தூய நீரும், வளமான மண்ணும், மலையும், குளிர் நிழல்தரும் சோலையுமாகத் திகழ்கின்றன. எனவே இவற்றின் தூய்மை காப்போம் உலகைக் காப்போம், சிறிய மாசுகள் தாமே சேர்கின்றன இவை என்ன செய்யும் என இருந்து விடக்கூடாது இதனையே வள்ளுவர்

''பீலி பெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்'' என கூறுகிறார்.
ஆம் ''சிறு துளி பெரு வெள்ளம்'' அல்லவா பெருவெள்ளம் ''வருமுன் காப்போம்'' அணிதிரள்வோம் தோழர்களே.

எஸ். ஜஸ்வித்ராஜி எம்.ஏ,
இ.அ. முகாம், மூங்கிலூரணி

# யாழை விட்டு ராணுவம் வெளியேறினால் வெளிநாட்டு மத்யஸ்தத்துடன் பேச்சுக்குதயார்

### புலிகளின் தலைவர் பிரபாகரன் அறிவிப்பு

'அரசாங்கம் எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தால், அதற்கு நாம் தயார். ஆனால்' யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும். அத்துடன் வெளிநாட்டு மத்தியஸ்தத்துடனேயே இப் பேச்சுவார்த்தையை நடத்த முடியும். இதுவே பேச்சுவார்த்தைகள் தொடர்பில் எங்களது இன்றைய நிலைப்பாடு.

விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தான் இவ்வாறு வடக்கில் அறிவித்திருக்கிறார்.

### புலிகளின் குரல்

விடுதலைப் புலிகளின் வானொலியான 'புலிகளின் குரல்' மூலமாக ஒலிபரப்பப்பட்ட பிரபாகரனின் இந்த அறிவிப்பு அடங்கிய அறிக்கையை அவ்வியக்கத்தின் அரசியல் ஆலோசகரான அன்டன் பாலசிங்கம் பத்திரிகையாளர் மகாநாட்டில் வாசித்துக்காட்டினார்.

யாழ்ப்பாண நகரில் இருந்தும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் இராணுவத்தினர் வாபஸ் பெற்றால் மாத்திரமே அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் சாத்தியமாகும் என்று புலிகள் முன்னரும் அறிவித்திருந்தனர். ஆனால் வெளிநாட்டு மத்தியஸ்தம் குறித்து பிரபாகரன் குறிப்பிட்டிருப்பதே இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

அத்துடன் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு அரசாங்கம் தயாரென்றால் அதற்கு தாங்களும் நிபந்தனையுடன் தயார் என்பதை பிரபாகரன் புத்தாண்டு பிறக்கவிருக்கும் தருணத்தில் மீண்டும்தெரிவித்திருக்கிறார்.

யாழ் நகரை ராணுவத்தினர் கைப்பற்றுவதற்கு முன்னர் தமக்கு அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிக்கும் கிளாலியைக் கடந்து கிளிநொச்சி மற்றும் வன்னியின் ஏனைய பகுதிகளுக்கும் வந்திருக்கும் மக்கள் புலிகளை முற்றுமுழுதாக ஆதரிக்கின்றார்கள் என்பதையே உலகுக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது என்றும் பிரபாகரன் வானொலி மூலமான தமது அறிவிப்பில் தெரிவித்திருக்கிறார்.

### யாழ். மருத்துவமனையில்

# பணியாற்ற விரும்பும் ஊழியருக்கு பல சலுகைகள்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ''சேவையாற்ற விரும்பும் சுகாதார சேவையிலுள்ள சகல தரங்களையும் சேர்ந்த ஊழியர்களின் விபரங்களைத் திரட்டி அனுப்புமாறு சுகாதார சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் சுற்றுநிருபமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி சுற்றறிக்கையில் இவ்விபரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்ற விரும்பும் வைத்தியநிபுணர்கள் டாக்டர்கள், தாதிகள், மருந்தாளர்கள், சிற்றூழியர் தங்களைச் சார்ந்த அனைவரின் விபரங்களையும் உடனடியாக திரட்டி அனுப்புமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பணியாற்றவிரும்பும் ஊழியர்களுக்கு விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் இலவச உணவு தங்குமிட வசதிகளும் வழங்கப்படும்.

தற்போது சேவையாற்றும் இடத்திலிருந்து இரத்மலானைக்கு தரைமார்க்க போக்குவரத்து வசதியும் அங்கிருந்து பலாலிக்கு இலவச விமானப் போக்குவரத்து வசதியும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### சந்துணவு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனர் சந்திரகாசன் சிறிய பரிசில்களை வழங்கி ஊக்குவித்தார். அதேபோன்று இக் கலந்துரையாடலில் பங்கு கொண்ட மாணவ மன்றங்களுக்கும் எமது கழகத்தினால் திருச்சி மண்டலத்தில் தயாரிக்கப்பட்ட வானொலிப் பெட்டிகளை கழக நிறுவனர் சந்திரகாசன் வழங்கி, நல்ல முறையில் பயன்படுத்தும்படி கேட்டுக் கொண்டார்.

பவானி மண்டலத்திற்குட்பட்ட பின்வரும் முகாம்களைச் சேர்ந்த மாணவ மன்றங்கள் வானொலிப் பெட்டிகளை பெற்றுக் கொண்டனர்.

01. பவானிசாகர், 02. அரைச்சலூர்-பெரியார் மாவட்டம்.

01. பூவைப்பட்டி, 02. வேடர் குடியிருப்பு, 03. பர மத்தி-கோவை மாவட்டம்.

01. பவளத்தனூர்-சேலம் மாவட்டம்.

01. தும்பளகள்ளி-தருமபுரி மாவட்டம்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# கவிதைச் சரம்

## கரம் இணைவோம்!

-தமிழீழதாசன்-

பல்லவி

ஒற்றுமையே எங்கள் பலமாம்-நாங்கள்
ஒன்று திரண்டு உழைப்பது நலமாம் (ஒற்று)

அனுபல்லவி

கட்டுப்பாடே வெற்றியைத் தருமாம்-எங்கள்
கைகள் இணைந்தால் மலையும் வருமாம் (ஒற்று)

சரணங்கள்

தனிமரம் என்றும் தோப்பா காது
தன்னலம் குடியை முன்னேற்றாது
இனியும் 'நான்' எனும் எண்ணம் கூடாது
எதிலும் 'நாம்' எனில் தடைகள் நில்லாது (ஒற்று)

மட்டுநகர், வன்னி, திருமலை, மன்னார்,
மலையகம், யாழகம் எனப் பிரியாது
ஒட்டுறவாகி உரிமைகள் மீட்போம்
ஒருதாய் மக்கள் நாம் என ஆர்ப்போம் (ஒற்று)

சாதி மதபேதம் சற்றும் பாரோம்
சண்டை மூட்டும்செயல் எதையும் நேரோம்
ஏதிலி நிலையால் இலக்கணம் மாறோம்
எங்கள் பண்பாட்டை எதிலும் மீறோம் (ஒற்று)

தமிழ்எனும் சொல்லே மூவினக் கூட்டு
தமிழின ஒற்றுமைக் கொடியை ஏற்று
இமிழ்கடல் வரைப்பில் ஈழம் நாட்டு
இதயத்தோடு இதயத்தைக் கூட்டு (ஒற்று)

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை
கூடிக் கலந்தால் பகையும் இல்லை
மட்டம் எவரும் எதிலும் இல்லை
மனது விரிந்தால் வா...மே எல்லை (ஒற்று)

## சுதந்திர நிலா!

எஸ். கணநாதன்

இ.அ. முகாம், தோப்புக்கொல்லை

அம்மா அணில் ஆகா சில் சில் ஓசை
அம்மா மிலா அது கமகம மணம்
அம்மா புட்டும் மாம்பழமும் வாய் அடைக்குது-இன்னி
அம்மா மணி அது நல்லூர்மணி!

ஐயோ கனவம்மா ஐயோ கனவு
நீ பெத்தபுள்ள கேக்குது, எப்பம்மா தருவாய் அதை எனக்கு
சுட்டு போட்டாலும் என் பூமியென கடுதாசிபோட்டு என்னை
சுட்டுப் போட உனக்கு மனசு வரேல்லையோ!
கூப்புடம்மா கூப்புடு நான் வாறன்
ஆயிரம் வெடி வெடிச்சாலும் அம்மாட பூமி
சுதந்திரம் இல்லை எண்டாலும் அங்கு
உனக்கு முன்னால் சுதந்திரமாய் சாகிறன்
வெக்கம் அம்மா வெக்கம் உனக்கு
என்னைப் போல் வீணனை ஈன்றதற்கு

வெடிச்சத்தம் மட்டுமா சுதந்திரம் கொண்டாடுது?
பௌர்ணமிக்கு நிலவு வரப்பயப்பிடுதோ? சொல்
அங்கு சில்லு சில்லு என்ற ஓசையும்
பலாச் சுளை நறு மணக்காற்றும்
சுதந்திரமாய் திரியுதே அப்ப-நான் ஏன் அங்கு
சுதந்திரமாய் இருக்க முடியாது!
எப்பம்மா தருவாய் எனக்கு சுதந்திரக்காற்றை?
இன்னும் உன் கருச்சிறையில் அடிமையாய் நான்
இருக்கிறேன்

ஏமாத்துகிறாய் என்னை நீ
அப்பவே உன்ற வாயில வந்ததெல்லாம் பொய்
நிலாவ புடிச்சு தருவன் எண்டனியெல்லே! அதுபோலத்தான்
குரங்கு புட்ட அப்பமாய் எட்டாம நிக்குது
சுதந்திர நிலா!

## ஈழத் தமிழர் நிலை

ஆண்டுகள் வளர்கின்றன
அன்புத் தமிழ் மக்கள்
மடிகிறார்கள்!
சொந்தங்கள் விட்டு
விலகுகின்றன
வேதனைகள் வந்து
சூழ்கின்றன!
ஏட்டில் எழுதுவது,
இடம் போய்ச் சேருவதில்லை
ஏங்கித் தவிக்கும் சொந்தங்களின்
நெஞ்சங்கள் குலைகின்றன
கரங்கள் நீட்டிக் கேட்டும்
கடமை செய்ய மறுக்கிறது
தமிழக அரசு!
ஈழத் தமிழர் என்றாலே
ஏனோ இந்த நிலை
ஏற்றம் தெரியவில்லை!
தமிழர்களிடம் •
இறுக்கம் தான்
இன்னும் இருக்கிறது.
உறைகள் இன்னும்
கிழிக்கப் படவில்லை!
கிழித்தால் தமிழர்
தலைகள் நிமிரும்.

செல்வன் குழந்தைவேல்
பிரகாஷ்
இ.அ. முகாம்
போகதல்லூர்.

## ஒரு ஈழத்தாயின் புலம்பல்!

கண்ணான கண்மணியே
ஏன் பிறந்தாய்
சொல் கனியே!
காலன் அவன்
ஷெல் வடிவில்
காத்திருக்கான்
உயிர் பறிக்க!
கண் மூட நேரமில்லை!
நம் கவலைக்கோ
முடிவுமில்லை!
இன்னேரம் ஏன் பிறந்தாய்
இன்னலிலே குளிப்பதற்கா?
நாடிருந்தும் வீடிருந்தும்
நல்ல பல நிலையிருந்தும்
நாதி அற்று நடுத்தெருவில்
வாடி நாங்கள்
துடிக்கின்றோம்!
விதியென்று வாழ்வுதனை
வெறுத்தொதுக்க முடியாமல்
உயிரை நாங்கள்
சுமக்கின்றோம்!
மதி இருந்தும்
என்ன பயன்?மனம்
கலங்கித் தவிக்கின்றோம்!
சத்தான ஈழ மண்ணில்
சொத்தாக நீ பிறப்பாய்
சோகங்கள் தான் மறைந்த
அந்த சுதந்திரத்
தமிழ் ஈழத்தில்
சுகமாக கண்விழிப்பாய்
சரித்திரம் படைத்த
வீர மண்ணில்
புது மொட்டாக
பிஞ்சுப் பாதங்கள்
தான் பதிப்பாய்
இலட்சிய மனிதனாய் வளர்த்து
ஈழ மண்ணிற்கு
வெற்றிகள் பல குவிப்பாய்
என்ற நம்பிக்கை
ஒளியினிலே
அன்று நாட்களை
கழித்திருந்தேன்
நானும் தான் களித்திருந்தேன்!
அந்தக் கற்பனைக்
கனவுகளை-இன்று
காற்றோடு தொலைத்து
விட்டேன்!
உன் உயிரைக்
காப்பதற்கே
வழி ஒன்று தெரியாமல்
இன்று-நடுத்தெருவில்
தவிக்கின்றேன்!
உதயத்தை வேண்டி-வேண்டி
பொழுதெல்லாம்
இறக்காமல்
இறக்கின்றேன்!

செல்வி D. சித்திரா
போகநல்லூர்.

## தமிழ்த் தேசம் தவிக்குது?

தன்மானச் சூரியனே தோழா-தமிழ்
மண்மானங் காக்க எழுந்து வா
உன்மானம் மட்டும் பெரிதல்ல,
மண்மானமும் பெரியதுடா

பண்பான தலைவர்கள்
மண்ணில் மறைந்ததனால்
தன்னலத் தலைகள் முளைத்ததுடா
முன்னோர், மூதறிவோர் வாழ்ந்த
ஈழநாட்டிலே இன்று
என்னென்னவோ நடக்குதடா!
உண்டு கொழுத்திடும் பன்றிகளை
இன்னும் விட்டு வைப்பதில்
என்ன நியாயமடா?-இளங்
கன்றே 'என் தோழா இதை,
எண்ணி...எண்ணிச் சிந்தியடா

கண்ணிய மாந்தர்கள்
கண் மறைந்ததால்
துண்டு போகுது தமிழ்த் தேசமடா
சண்டையும், சச்சரவும், பெருகுவதால்
மண்டைகள் உடைந்து மாளுதுடா
அண்ணனும் தம்பியும் பகைப்பதால்
அன்னை தேசம் தவிக்குதடா?

கவிசுரபி
சுப. சந்திரசேகரன்

வடக்கு-கிழக்கு

## இணைப்பு தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன?

### தீர்வு யோசனையை தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கும் முன் தெளிவுபடுத்த 4 தமிழ்க் கட்சிகள் வலியுறுத்து

''ஜனாதிபதி முன்வைத்துள்ள இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு யோசனையில் வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பாக எதுவும் திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. ஜனாதிபதி அரசியல் யோசனையை பாராளுமன்ற தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கும்முன் வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பாக அரசு தமது நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்.''

இவ்வாறு நான்கு தமிழ் அரசியல் கட்சிகள் அரசாங்கத்தை வலியுறுத்தவுள்ளன. இது தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், டெலோ, ஈரோஸ் ஆகிய நான்கு கட்சிகளும் கடந்த மூன்று வாரங்களாகபேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

ஜனாதிபதி முன்வைத்துள்ள அரசியல் யோசனையில் வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பாக எதுவும் கூறப்படவில்லை. ஆகையால் அதனை வலியுறுத்தவே நாம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம் என ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மேலும் பிராந்திய ரீதியில் அதி உயர் நியமனங்கள் தொடர்பாக மத்திய அரசாங்கம் அரசியலமைப்பு கவுன்சில் ஒன்றை அமைக்கவுள்ளது. ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர், உயர்நீதிமன்ற நீதியரசர், மாகாண ஆளுநர் ஆகியோர் இந்த அரசியலமைப்புக் கவுன்சிலில் அங்கம் வகிப்பர்.

பிராந்திய ரீதியில் வழங்கப்படும் அதிஉயர் நியமனங்கள் அனைத்தும் பிராந்திய நிருவாகத்தினால் வழங்கப்பட வேண்டும். ஆகையால் அரசியலமைப்பு கவுன்சில் பிராந்திய ரீதியில் அமைக்கும் அதிகாரங்கள் யோசனையில் உள்ளடக்கப்படவேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாண தொடர் நிலப்பரப்பை துண்டிக்கும் வகையில் கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்களிலிருந்து இந்த குடியேற்ற வாசிகள் வெளியேற்றப்பட வேண்டும் என அரசை கேட்கவுள்ளோம் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

www.padippakam.com



# ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்: 1994-95-ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பெருமை தரும் விழுமியங்கள்:

அ) ஒவ்வொரு முகாமிலிருந்தும் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மண்டலத்திலிருந்து 6 ஆண்கள், 6 பெண்கள் வீதம் அகதிகளை அழைத்து உள்நாட்டு-வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஐ.நா. அகதிகள் உயர் ஆணையம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமை அமைப்புகள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆகியோர் பங்கு கொண்ட சென்னைக் கூட்டத்தில் தங்கள் பிரச்சினைகளை நேரடியாக எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பளித்து அங்கு பேசப்பட்டவற்றை ஒரு ஆவணமாகத் தயாரித்து சர்வதேசக் கவனத்திற்குக் கொண்டு சென்றது.

ஆ) அகதி மக்களின் உளவியல் பிரச்சினைகளை ஆராய்ந்து, லண்டன் MIOT நிறுவனத்தின் துணையுடன் ஒரு அறிக்கை தயாரித்து, அரசுகளின் பார்வைக்கு வைக்க ஏற்பாடு செய்தது.

இ) விழிப்புணர்வு மற்றும் அகதி மக்களின் பாதுகாப்பு செயற்பாடுகளுக்கென ரூ. 30,000/- மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை வகுத்திருப்பது.

ஈ) 1995 பிப்ரவரி 5ம் திகதி முதல் 17ம் திகதி வரை கழகத்திற்கு நிதியுதவும் அமைப்புகள் கழகச் சேவைகள் பற்றி நேரடி மதிப்பீட்டை மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை மூலம் கழகத்தின் உண்மை உழைப்புக்கும், தெளிவான கணக்கு வழக்குகளுக்கும் சான்றளித்துப் பாராட்டியிருப்பது.

உ) 1994 அக்டோபர் 23ம் திகதி முதல் டிசம்பர் 3ம் திகதிவரை நெதர்லாந்தில் நடைபெற்ற ஊட்டச்சத்து பற்றிய பன்னாட்டுக் கருத்தரங்கில் கழகத்தின் சார்பில் டாக்டர் திருமதி தேவராஜா பங்குகொண்டு பாராட்டுடன் திரும்பியிருப்பது.

இவையெல்லாம் கழகச் சாதனையெனும் மாலையில் கோக்கப்பட்ட முத்துக்களாகும்.

முடிப்புரை:

ஆக, கழகத்தின் மேற்கண்ட 12வது ஆண்டுச் சாதனைகள் வேதனைகளுக்கு இடையில் இயற்றிய விழுமிய முத்திரைகள் ஆகும்.

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்'

என்றபடி, தனது கடமைகளை கழகம் பெருமை கொள்ளும் வண்ணமே ஆற்றி வந்திருக்கிறது என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்தப் பெருமைகள் தொடர்ந்திட, வெற்றிகள் மேலும் விளைந்திட கழக உறுப்பினர்களாகிய உங்களுடைய ஒத்துழைப்புடனும், கழகச் சேவையால் பயன்பெறும் அகதி மக்களின் ஆதரவுடனும் இனியும் செம்மையாகச் செயலாற்ற இறையருள் நமக்குத் துணை செய்யுமாக.

அதே நேரத்தில் கழக உறுப்பினர்களுடைய, அகதி மக்களுடைய பங்களிப்பு இத்தன்னார்வத் தொண்டுக்கு இன்னும் பன் மடங்கு தேவையாகும். ஆம்; நமது பிரச்சினைகளில் எந்தவித நேரடிச் சம்பந்தமும் இல்லாத, கடுகளவு கடப்பாடுமில்லாத பன்னாட்டு நிதியுதவி நிறுவனங்கள் தங்கள் மக்களிடம் திரட்டிய தங்கள் நாட்டுப் பணத்தையும், தங்கள் உழைப்பையும், மாந்தநேய உணர்வு ஒன்றால் மட்டுமே உந்தப்பட்டு நமக்காகச் செலவிட முன்வருகின்றன என்றால், நாம் நமது பங்களிப்பை எந்த அளவுக்குச் செலுத்தக் கடமை பட்டிருக்கிறோம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அந்த முறையில் நோக்கினால் நமது பங்களிப்பு இன்னும் உரிய அளவுக்கு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

நாம் நமக்காக, நமது மக்களுக்காகச் செய்யும் தொண்டில் நம்மை முழு அளவுக்கு அர்ப்பணித்துக் கொள்ளவில்லை என்றால், நம்மை நாம் கட்டி எழுப்புவது எப்படி?

'தம்பலம் கொண்டு அம்பலம் ஏறு'
என்பதன்றோ நமது முன்னோர் வாக்கு!

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்''

என்பதன்றோ தமிழ் மறை! தெய்வம் போல் நமக்கு உதவ மற்றவர்கள் முன்வருகையில், நாம் உய்வடைவதற்கு நமக்கு நாமே உதவிக் கொள்வதில் பின்னடையலாமா? கூடாது. இத்தொண்டில் நம்மை நாமே முழுவதுமாக அர்ப்பணித்துக் கொள்ள இந்த நல்ல நாளில் சூளுரை ஏற்போமாக!

நம்முடைய சேவைகளுக்கு அடித்தளமான தேவைகளை நிறைவு செய்யும் முகமாக நமக்கு நிதியுதவிய உதவி வரும் நிறுவனங்களுக்கும், நம்மோடு நட்புடன் ஒத்துழைத்து வரும் சகோதரத் தொண்டு நிறுவனங்களுக்கும், இந்திய மத்திய-மாநில அரசுகளுக்கும், அதிகாரிகளுக்கும் மற்றும் நாம் கோரிய போதெல்லாம் ஓடி வந்து ஒத்துழைப்புத் தரும் அரசியல் கட்சிகள் மற்றும் பொது நல அமைப்புகளுக்கும், அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் எமது தொண்டர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து இவ்வறிக்கையினை நிறைவு செய்கிறோம்.

''சூடும் குளிரும் உயிருக்கில்லை
சோர்வும் துக்கமும் தொண்டருக்கில்லை''

-பாரதி

—இவ்வாறு, ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக ஆண்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பத்திரிகை செய்திகள்

23-12-1995

மேற்கு வங்க மாநிலம் புருலியா மாவட்டத்தில் கடந்த 18ம் தேதி விமானம் மூலம் மர்மமான முறையில் தரையில் போடப்பட்ட ஆயுதங்கள் புலிகளுக்காக அனுப்பப்பட்டிருக்கலாம் என்றும், தவறுதலாக இப்பகுதியில் போடப்பட்டிருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

(தினமணி)

ஆனையிறவுக்கு தெற்கே சுமார் மூன்று கி.மீ. தொலைவில் புலிகள் இலக்கு மீது நேற்று முன்தினம் இராணுவம் தாக்குதல் தொடுத்ததில் இரண்டு போராளிகள் கொல்லப்பட்டனர்.

(தினமணி, தினமலர்)

### யாழ். குடா நாட்டிலிருந்து

# இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு வன்னியில் தற்காலிக நியமனம்

'ரிவிரெச' ராணுவ நடவடிக்கை காரணமாக வன்னிப் பகுதிக்கு யாழ் குடா நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள அரசாங்க ஆசிரியர்களுக்கு அவர்கள் இப்போது தங்கியுள்ள பகுதிகளிலேயே தற்காலிக நியமனங்கள் வழங்கப்படும். இதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரான கே. தியாகராஜா தெரிவித்தார்.

இடம் பெயர்ந்து வந்துள்ள மாணவர்களும் தாங்கள் தற்போது தங்கியுள்ள பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் சேர்ந்து தமது கல்வியை தொடரலாம் என்றும் இதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

### முகாம்களாகிவிட்ட பாடசாலைகள்

வட-கிழக்கு மாணவர்களின் கல்வி, யுத்தம் காரணமாக பாதிக்கப்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை. எனவேதான் இந்த தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார்.

லட்சக்கணக்கில் மக்கள் யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வன்னிப்பகுதிகளுக்கு வந்து அங்குள்ள நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் தங்கியிருக்கின்றனர். இவ்வாறு எழுபது சதவீமான பாடசாலைகள் அகதி முகாம்களாக மாறியுள்ளன. இந்த நிலையில் எவ்வாறு பாடசாலைகள் நடைபெறுவது சாத்தியம்? என்று அவரிடம் கேட்டபொழுது-''ஜனவரி 1ம் தேதி முதல் நாட்டின் பாடசாலைகள் யாவும் மீண்டும் தொடங்கியிருக்கின்றன. வட-கிழக்கு பாடசாலைகளும் இதே தினம் ஆரம்பமாகும். அகதி முகாம்களில் உள்ள பாடசாலையில் தங்கியிருப்போர் இப்பொழுது படிப்படியாக, வேறு இடங்களில் கொட்டில்கள் அமைத்து தங்கவைக்கப்படுகின்றனர்.

### இடம் பெயர்ந்தோரின் சம்பளக் கோவைகள்

ஜனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் பெரும்பாலான பாடசாலைகளிலிருந்து அகதிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுவிடுவர். மாற்று இடங்கள் அமைக்கும் பணிகளில் அரச, தொண்டர் நிறுவனங்கள் உதவி வருகின்றன இது ஒரு பிரச்சினையாக இருக்காது என்று அவர் பதிலளித்தார்.

பெருந்தொகையான பாடசாலை மாணவர்களும் இடம் பெயர்ந்துள்ளனர் அவர்கள், இப்போது எங்கே தங்கியிருக்கிறார்களோ அங்கே இருக்கும் பாடசாலைகளில் சேர்ந்து கல்வியை தொடர முடியும். இந்த மாணவரின் பாடசாலை அனுமதிக்கு விடுகைப் பத்திரம் கோரப்படமாட்டாது. இடவசதி போதவில்லை என்றால் விசேட கொட்டில்கள் கட்டப்படும். இதற்கான நிதியை அரசிடமிருந்து கேட்டுள்ளோம்'' என்றும் அவர்மேலும் சொன்னார்.

இடம்பெயர்ந்த இடங்களில் தற்காலிக ஆசிரியர்களாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்குரிய 'சம்பளக்கோவைகள்' யாழ் நகரிலுள்ள கல்விக் காரியாலயத்தில் முடங்கிக் கிடக்கின்றன. இவை இல்லாமல் எவ்வாறு அவர்களுக்குரிய சம்பளத்தை கொடுக்கப்போகிறீர்கள்?' என்று அவரிடம் கேட்டபொழுது அதிபர்களும் இடம் பெயர்ந்திருப்பார்கள். இதற்கு அவர்களின் சிபாரிசு பெறப்படும். அவர்களின் சிபாரிசுப்படி இடைக்கால சம்பளம் வழங்கப்படும் என்று அவர் விளக்கம் கொடுத்தார்.

### தனியார் பாடசாலை: முடிவு தெரியாது

வடக்கிலிருந்து வடக்கு-கிழக்குக்கு வெளியே சென்று தங்கியுள்ள ஆசிரியர்களுக்கு அவர்கள் தற்பொழுது தங்கியுள்ள இடங்களிலுள்ள பாடசாலைகளில் தற்காலிக நியமனங்கள் வழங்கப்படுமா? என்று கேட்டபொழுது ''இல்லை'' என்றார்.

கொழும்பு உட்பட மற்றும் வட-கிழக்குக்கு வெளியே இடம் பெயர்ந்த ஆசிரியர்கள், கொழும்பு-7, கிரகோரிஸ் வீதியிலுள்ள வட-கிழக்கு மாகாண ஆளுநரின் காரியாலயத்தில் தங்கள் விபரங்களைப் பதிவு செய்யவேண்டும். இப்படி பதிவு செய்யப்படுவோர் பின்னர் எமது அமைச்சால் ஆசிரியர் வெற்றிடமுள்ள வட-கிழக்கு மாகாண எல்லைக்குள் உள்ள இதர மாவட்ட பாடசாலைகளுக்கு தற்காலிகமாக கடமையாற்றுவதற்காக அனுப்பிவைக்கப்படுவார்கள் என்றும் செயலாளர் தியாகராஜா மேலும் விளக்கமளித்தார்.

இடம் பெயர்ந்த தனியார் பாடசாலை ஆசிரியர்கள் விவகாரம் பற்றி இன்னமும் எதுவித முடிவும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை என்றும் அவர் சொன்னார்.

### கடற்படையினர் யுத்தக் கப்பல்கள் கொள்வனவு

இலங்கை கடற்படையினர் இரண்டு யுத்தக் கப்பல்களை ரஷ்யாவில் இருந்து கொள்வனவு செய்துள்ளனர். இந்த யுத்தக் கப்பல்கள் அடுத்த மாத இறுதிக்குள் கொழும்பு வரும் என கடற்படை தலைமையக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சக்தி வாய்ந்த இந்தக் கப்பல்கள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ள இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப் படவே கொள்வனவு செய்யப் பட்டுள்ளன.'

இந்த கப்பல்களை கொள்வனவு செய்வதற்காக கடற்படையின் உயர் அதிகாரிகள் குழுவொன்று அண்மையில் ரஷ்யா சென்று வந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# வாசகர் நெஞ்சம்

அன்புள்ள ஆசிரியருக்கு,

'இலங்கையில் சுமூகத் தீர்வு ஏற்பட இந்தியா வழி செய்க'-என்ற தலைப்பில் அரசுசாரா்த் தொண்டு நிறுவனங்களின் அறிக்கையை சென்ற இதழின் முற்பக்கத்தில் வெளியிட்டிருந்தீர்கள். இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கும் ஈழ அகதி மக்களின் குறைபாடுகளையும் உடனடியாகத் தீர்த்து வைக்கும்படி அவ்வறிக்கை கேட்டுக் கொண்டிருந்தது வரவேற்கத் தக்கது. அதே வேளை அரசுசாரா்த் தொண்டு நிறுவனங்கள் 1991க்கு முன்பு செய்ததைப் போல அகதிகள் சேவையில் முனைப்புடன் ஈடுபட முன்வர வேண்டும்.

ஏ. டொமினிக் நாதன், தருமபுரி.

''கண்ணைப்போல ஈழ மண்ணைக் காப்போம்'' என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்த ஆசிரியத் தலையங்கம் சிறப்பாக இருந்தது.

ரா. மகாலிங்கம், மதுரை-4.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதையும், கொழும்பில் தமிழ் மக்கள் போலீசாரால் வெளியேற்றப் படுவதையும் ஒன்று போலப் பாவித்து ஈ பி.டி.பி.எம்.பி.ஆர். ராமநாதன் பாராளுமன்றத்தில் பேசியிருப்பது சற்றும் பொருத்தமற்றதாகும். யாழிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது தற்காலிகமானதும் அவர்களின் நலத்தின் பொருட்டுமாகும். ஏனெனில், அந்த ராணுவத்துக்கு யாராவது துப்புக் கொடுத்தாலும் பொதுமக்களின் கோபம் முஸ்லிம்களின் மீது திரும்பக்கூடிய அபாயம் இருந்தது. இலங்கை ஒரே நாடு—கொழும்பு தலைநகர் எனச் சொல்லிக் கொள்ளும் பொலிசார் அதையே செய்வது எப்படிச் சரியாகும்?

கே. ஸ்ரீஸ்கந்தராசா, கன்னியாகுமரி.

சென்ற இதழின் கவிதைச்சரத்தில் அத்தனை பாட்டுக்களும் அருமை. ''கல்லறைகள் மூடாதோ, கருவிகளின் சத்தம் ஓயாதோ, நல்ல காலம் பிறக்காதோ, நம் எதிர்காலம் சிறக்காதோ'' என்ற பாலேந்திரன் கவிதை வரிகள் ஈழத் தமிழனின் இதய ஒலியாக அமைந்தது.

பி. ரத்தினவேலு, மேட்டுப்பாளையம்.

ஜெப்பையரின் 'ஆப்பிழுத்த குரங்கின் கதை' சரியான மட்டையடி.

தி. கனகேந்திரன், கோவை-8.

''தமிழர் கைது விவகாரத்தில் எங்கே நீதி, நியாயம்?'' என்று பாராளுமன்றத்தில் இ.தொ.கா.எம்.பி. தேவராஜ் எழுப்பியுள்ள கேள்வி சிறீ லங்காவுக்கு சரியான சாட்டையடி.

ஐ.பா. இராசவரோதயம், திருச்சி-8.

''தமிழ் மக்களைப் பாதுகாக்க இன்று எவருமில்லை'' என முன்னாள் சபாநாயகர் முகமத் பாராளுமன்றத்தில் பேசியிருப்பது சரியே. ஆனால் இவர் அரசில் இருந்தபோது தமிழ் மக்களைப் பாதுகாக்க என்ன செய்தார்?

டி.டி.பி. காதர், கடலூர்-1.

''சண்டைக்கிடா சந்திரிகாவின் சமாதான வேடம் கலைகிறது'' கட்டுரை ஈழ சுதந்திரனில் வாசித்து சந்தோஷமும் பெருமிதமும் அடைந்தேன். சண்டைக்கிடா சந்திரிகா கூறியுள்ளதாவது'' இன்னும் ஒரு வருடத்துக்குள் சண்டை முடிவுக்கு கொண்டு வரப்படும்'' என்பதாகும். இதை நாம் ஒரு வருடத்துக்குள் இலங்கைத் தமிழர்களை கூண்டோடு அழித்து விடுவேன் எனக் கூறியதாக எடுக்க வேண்டும்.

எஸ். முருகேச மாஸ்டர், செங்கல்பட்டு.

# வடக்கிலிருந்து வரும் தமிழ் மக்களுக்கு வவுனியாவில் தடங்கல் முடங்கல்கள்

## 'புளொட்' எம்.பி.க்கள் புகார்

''கடங்கள்ஷ் நெருக்கடிகளுக்கு மத்தியில் வடபகுதியில் ''பாஸ்'' பெற்று வவுனியாவுக்கும் கொழும்புக்கும், திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளுக்கும் செல்வதற்காக வந்த எங்களை, இந்த தற்காலிக முகாமில் நிறுத்திவைத்து ''பிரயாண பாஸ்'' வழங்காமல் அதிகாரிகள் தாமதப்படுத்துகின்றார்கள். துயரப்பட்டு வருகின்ற எங்களுக்கு வவுனியாவில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் மேலும் துன்பமளிப்பவையாகவே உள்ளன. இந்த கஷ்டங்களைப் போக்கி எமது அத்தியாவசிய அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு துரிதமாகப் பயணத்தை தொடர்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும்.

வடக்கிலிருந்து வந்து வவுனியா புகையிரத நிலைய தற்காலிக முகாமில் ''பிரயாண பாஸ்'' பெறுவதற்காகத் தங்க வைக்கப்பட்டுள்ள, வடபகுதியைச் சேர்ந்தவர்கள் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாகிய த.சித்தார்த்தன் எஸ்.சண்முகநாதன் மற்றும் அக்கட்சியின் உபதலைவராகிய என். மாணிக்கதாசன், வவுனியா அரசாங்க அதிபர் ஆகியோரிடம் உருக்கமாக அந்த பயணிகள் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

கடுமையான நடைமுறைகளுக்கு உட்பட்ட நிலையில் தமது பிரயாணத்தைத் தொடர முடியாமல் புகையிரத நிலைய தற்காலிக முகாமில் நாள் கணக்கில் தங்கியுள்ளவர்களது கஷ்ட நிலைமைகளை நேரில் கேட்டறிவதற்காக வன்னி எம்.பி.த. சித்தார்த்தன் தலைமையிலான இக்குழுவினர் நத்தார் தினத்தன்று இந்த முகாமிற்கு விஜயம் செய்தார்கள்.

சுகவீனமுற்றுள்ள தமது குடும்பத்தினரையும் இடம் பெயர்ந்து கஷ்டமடைந்துள்ள தமது குடும்பத்தவர்களையும் பார்ப்பதற்காக வடபகுதிக்குச் சென்று திரும்பிய அரச தனியார் துறை ஊழியர்களும், சொந்த அலுவல்களுக்காக கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கு செல்ல வந்தவர்களும் வெளிநாட்டிலுள்ள வேலைத் தலங்களுக்குவிடுமுறைமுடிந்து திரும்பிச் செல்வதற்காக வந்தவர்கள், வெளிநாட்டுக்கு பிரயாணம் மேற்கொள்ள வந்தவர்கள், வைத்தியத் தேவைகளுக்காகச் செல்ல வந்தவர்கள் மேல் நிலை கல்வியைத் தொடர்வதற்குத் தெரிவாகி, கொழும்பில் இடம் பெறுகின்ற தமது உறவினர்களின் மரண வீடு மற்றும் திருமணம் போன்ற காரியங்களுக்குச்செல்பவர்கள் என பல தரப்பட்டவர்களும் வவுனியாவுக்கு வந்து சேர்ந்த அதே தினமே தமது பிரயாணத்தைத் தொடர முடியாமல் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறித்தும், தமது கண்டங்கள், தாமதங்கள் காரணமாகத் தமக்கு ஏற்பட்டுள்ள மனத்தாங்கல், பண கஷ்டங்கள், சிரமங்கள் குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

முகாமில் பாஸ் வழங்குவதற்குப் பொறுப்பாகவுள்ள இராணுவ அதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் சித்தார்த்தன் குழுவினர் முகாமின் நடைமுறைகள் குறித்து விபரமாகக் கேட்டறிந்தார்கள்.

இரண்டு, மூன்று தினங்களாகவும் 5,6தினங்களாகவும் உரிய ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பித்தும் முகாமிலிருந்து வெளியேறி, பயணத்தைத் தொடர முடியாமல் கண்டமடைந்துள்ளவர்களின் நிலைமைகள் குறித்து உடனடியாக அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தார் வன்னி எம்.பி.

# அகதி முகாம்களில் அடிப்படை வசதியை ஏற்படுத்துங்கள்

## தமிழர் பாதுகாப்புக் கழகம்

(நமது நிருபர்)

''முகாம்களில் வசிப்பவர்கள் தேவையான உணவு, உடை, உறையுள் சுகாதார வசதிகள் என்பன கிடைக்கப் பெறாமல் அவதிப்படுவதாக அறிகிறோம். இவர்களுக்கு இந்த அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். அளவுக்கதிகமான இட நெருக்கடியாலும் சுகாதார வசதிகளற்ற இடங்களில் வசிப்பதனாலும் தொற்றுநோய்கள் பரவுகின்றன

ஆகவே அவ்விடங்களுக்கு தேவையான மருந்து வகைகளையும் மிக அவசரமாக தேவைப்படும் நோய்த் தடுப்பு மருந்து வகைகளையும் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

இவ்வாறு தமிழர் பாதுகாப்புக் கழகம் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளில் தெரிவித்துள்ளது.

கழக துணைத்தலைவர் க.வேலாயுதப்பிள்ளை செயலாளர் க.இராஜபுவனேஸ்வரன் ஆகியோர் கையெழுத்திட்டு விடுத்துள்ள அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

சிவிரச ராணுவ நடவடிக்கைக்கு முன்னர் அந்தப்பகுதிகளில் சேவைசெய்த அரசசார்பற்ற ஸ்தாபனங்களை அங்கு தொடர்ந்தும் பணியைச் செய்வதற்கு அனுமதியளித்தால் நீங்கள் அங்கு வாழும் மக்களின் கஷ்டங்களை மனிதாபிமான முறையில் கண்ணோக்குகின்றீர்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

இந்த அரசு சார்பற்ற நிறுவனங்கள் இயற்கையான அநர்த்தங்கள் நேர்ந்தபோதும் மனிதனால் ஏற்பட்ட அநர்த்தங்களின் போதும் உலகின் வேறு பாகங்களில் அளப்பரிய சேவை செய்திருக்கிறார்கள்.

சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் பயமுறுத்தப் படுகின்றனர். இது ஒரு பெரும் சமாதானத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தக்கூடிய தகுந்த சூழ்நிலையல்ல அரசாங்க கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் தொடர்பு சாதனங்களோ ஏனையவையோ இனங்களுக்கிடையே இன ஐக்கியத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்தக்கூடிய வகையிலும் இனங்களுக்கிடையே பகைமையை ஏற்படுத்தாத விதத்தில் செய்யவேண்டும். மக்களின் பிரதிநிதிகள் இம்முயற்சிக்கு பெரும்பங்களிப்பைச் செய்ய முடியும்.

கொழும்புக்கு தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வருபவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் பல வடக்கிலிருந்து கொழும்புக்கு வருபவர்கள் வவுனியாவில் பல இன்னல்களை அனுபவிக்கிறார்கள்.

கொழும்புக்குவருபவர்கள் குறைந்த செலவுடன் தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். இவ்விதம் அரசு தங்குமிட வசதிகள் செய்து கொடுத்தால் அங்கு தங்க வருபவர்களைப் பதிவு செய்வதும் சுலபமாக இருக்கும். பதிவு செய்வதற்கான வசதிகளை அந்த விடுதிகளிலேயே ஏற்படுத்திவிட்டால் சுலபமாக இருக்கும்.

கொழும்புக்கு வருபவர்கள் பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும் என சட்டத்தில் ஏற்பாடு செய்தால் இதற்குப்பொறுப்பாக ஒரு உத்தியோகத்தரை நியமித்து ஒவ்வொரு நாளும் வேலை நேரத்தில் இதனைச் செய்வதற்கு அவரைப்பணித்தல் வேண்டும் இன்றைய நிலையில் ஒருவர் தம்மைப்பதிவு செய்வதற்குபல தடவைகள் பொலீஸ்நிலையத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துயரங்களையெல்லாம் கருத்தில் கொண்டு விரைவில் அவற்றைத் தீர்க்க...

# மழைக்கு மத்தியிலும் மட்டக்களப்பில் சோதனை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த திங்கள் இரவு முதல் கடும் பலத்த மழை பெய்கிறது. வானம் மப்பும் மந்தாரமுமாக காணப் படுகிறது.

வானிலைஅவதான நிலையத்தின் அறிக்கையின்படி செவ்வாய் காலை 8-30 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில் ... மழை பெய்துள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் முதல் மாரி காலம் ஆரம்பித்த போதிலும் குறைந்த மழை வீழ்ச்சியே கிடைத்தது.

பருவ மழைக்கான வடகீழ் பருவக்காற்று தற்போது வீசத் ... சுமாரான மழை பெய்யலாமென வானிலை அவதான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொட்டும் மழையிலும் சோதனை நடவடிக்கைகள் தீவிரமாக இருந்து வழமையான சோதனைச் சாவடிகளுக்குப் புறம்பாக முக்கிய சந்திகளில் ... பொலிசார் சோதனைகளை ...

# ஒரு ஈழவாசகரின் ஆர்வ ஆலோசனைக் கடிதம்

*ஈழசுதந்திரன் வளர்ச்சி-விநியோகம்:*

இலங்கைத் தமிழ்த் தேசிய மக்களின் இதய இணைப்புப் பாலமாக நாட்டில் 'சுதந்திரன்' ஏடு விளங்கியது. அனைவரும் அறிந்ததே. ஈழத்தமிழ் மக்கள் ஏதிலிகளாக இந்தியாவில் (தமிழ் நாட்டில்) தஞ்சம் புகுந்துள்ள நிலையில் அவர்களின் இதய இணைப்புப் பாலமாக விளங்கிவருவது 'ஈழ சுதந்திரன்' ஆகும். அதன் பரப்புகையிலும் வளர்ச்சியிலும் இப்போது வாசகர்களிடம் புதிய ஆர்வம் ஏற்பட்டுள்ளது. அதனைப் பிரதிபலிக்கும் ஒரு கடிதத்தை இங்கே வெளியிட்டுள்ளோம். இதுபோன்ற எண்ணும் ஏனைய வாசகர்களும் தங்கள் எண்ணங்களை எழுதியனுப்ப வேண்டுகிறோம்-ஆசிரியர்.

அன்புடையீர்,

1996 சனவரி மாதத்துக்கான ஈழ சுதந்திரனின் முதல் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட புதுவருட நத்தார் வாழ்த்துக்களைப் படித்த பின்பு மனதில் தோன்றியதை வைத்து எழுதுகிறேன்.

அதனைப்படித்த பின்புதான் இப்பத்திரிகையை இங்குள்ள பத்திரிகை விற்பனையாளர்கள் (News Agents) சுட்கு விநியோகித்துவிற்பனை செய்ய முயற்சி செய்து பார்க்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. நான் 1959 முதல் 1961 நடுப்பகுதிவரை இலங்கையில் பிரசுரமாகும் ''வீரகேசரி''யின் யாழ் கிளை அலுவலகத்தில் விநியோகம் மற்றும் 'வசூல் பகுதியிலும்' பின்பு கொழும்பு தலைமை அலுவலகத்திலும் கணக்குப் பிரிவிலும் வேலை பார்த்தமையால் இத்துறையில் சிறிதளவாவது அனுபவம் உண்டென்றால் அது தப்பல்ல.

எனவே இது தொடர்பான உங்களது விபரங்கள் கிடைத்ததும் ஒரு சேவை என்ற அடிப்படையில் யாராவது ஒன்றிரண்டு நியூஸ் எஜண்டுகள் மூலம் விற்பனை செய்ய முயற்சித்துப் பார்க்கலாம்என எண்ணுகின்றேன்.

இவ்வாறு விற்பனை செய்வதால் இரு நன்மைகள் உண்டென நம்புகின்றேன். முதலாவது நமது பத்திரிகையின் விற்பனையை அதிகரிப்பது. அடுத்ததாகவும் மிகவும் முக்கியமானதாகவும், இலங்கையில் நடப்பவைகள், அங்கு தமிழன் படும் கஷ்டம் முதலியவை, இங்கு அகதிகளாக வந்து தஞ்சமடைந்துள்ளோரது பல்வேறு மனிதாபிமானப் பிரச்சினைகள் முதலியவைகளைப் படிப்படியாக இந்த நாட்டுப் பிரச்சனைக்கட்கும் அதிக அளவில் தெரியப்படுத்துவதன்மூலம் படிப்படியாக அவர்களது மனத்தை வென்றெடுக்கவும் அதன் மூலம் இந்நாட்டின் உதவி ஒத்தாசைகளைக் காலக்கிரமத்தில் பெறவும் வழிவகுக்கும் என்பது எனது எண்ணம்.

இதனை தாங்களும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், 'ஈழ சுதந்திரன்' நியூஸ் ஏஜண்டுகட்கு என்ன நியதிகட்கு அமைவாக விநியோகிக்கப்படும் என்பதனை அறியத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு தாங்கள் தரும் பதிலில் விசேடமாக பத்திரிகைகள் எவ்வாறு, பிரதி மாதமும் எந்த எந்தத் திகதி மட்டில் அனுப்பி வைக்கப் படும். அவர்கட்கு என்ன விலைக்குத் தரப்படும்-அதாவது அவர்கட்கு எவ்வளவு கழிவு உண்டு என்பதனையும், நாம் ஆரம்பத்தில் குறைந்த எண்ணிக்கையிலான பத்திரிகைகளையே ஏஜண்டுகட்கு விநியோகித்து, படிப்படியாக அதிகரிக்க வேண்டும் என்பது உண்மையான போதிலும். இவ்வாறு கொடுக்கப்பட்டு அவர்களிடம் விலைப்படாது ஏதாவது பத்திரிகை இருப்பின் அதுபற்றி எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைபற்றி (அதாவது return of unsold copies)யும் விபரமாக அறியத் தருமாறு வேண்டுகின்றேன்.

இது தொடர்பான பதில் தங்களிடமிருந்து கிடைத்த பின்புதான் இந்நாட்டவர்களது உதவியுடன் பத்திரிகை விற்பனையாளர்களை அணுகலாம் என்றுள்ளேன். எனவே இது சம்பந்தமான உங்களது பதிலைக் கூடிய விரைவில் தயவு செய்து அனுப்பி வைக்கவும்.

இந்நாட்டவர் யாரையாவது சந்தாதாரராகச் சேர்க்க முடியுமாகில் அவர்களிடம் சந்தாப் பணத்தைப் பெற்று அதனைத் தங்கட்கு M.O. வகையில் அனுப்பி வைக்கும் போது, அவர்களது பெயர் விபரங்களையும் அனுப்பி வைக்கின்றேன். அப்படியான சந்தர்பபங்களில் பத்திரிகைகளைத் தாங்கள் தபாலில் பிரதி மாதமும் அவர்கட்கு நேரே அனுப்பி வைக்கலாம்.

ச. ஜெயராசா
4/145-P8 முன்றாம் குறுக்குச்சாலை,
பாரதிநகர், கிருஷ்ணகிரி,

---

இனப் பிரச்சினை தீர்ப்பதற்காகவருகிறதைப்பொங்கல் தினத்தில் அதிகாரப் பகிர்வு திட்டத்தின் சட்ட முன் வரைவு தயாராகிவிடும் என்று தமிழ்ப் பிரதிநிதிகளிடம் சந்திரிகா கூறியதாக ஒப்சவர் நாளிதழ் தெரிவித்தது.

(தினகரன், தினமலர்)

சிங்கள ஊர்காவற்படையினர் கடந்த சில நாட்களில் பத்து தமிழர்களை கடத்திச் சென்றுள்ளனர் என சந்திரிகாவிற்கு மட்டக்களப்பைச்சேர்ந்த TULF MP ஜோசப் பரராஜசிங்கம் கடிதம் அனுப்பியுள்ளார்.

([illegible])

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் நோயாளர் தொகை அதிகரிப்பு

## மருத்துவ உபகரணங்கள், டாக்டர்களை அனுப்பி வையுங்கள்

நோயாளிகள் நிறைந்து வழியும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு 5 வைத்திய அதிகாரிகளையும் 6 தாதி அதிகாரிகளையும், மருத்துவ உபகரணங்கள் தளவாடங்கள், போதிய மருந்து வகைகள் என்பவற்றையும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் எஸ் தில்லை நடராஜா அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களுக்கு மேலதிக வார்டுகளையும் வெளிநோயாளர் பகுதிக்கு மேலதிக இடவசதிக்கேற்ற வகையிலானகட்டிடங்களையும் அமைத்துத் தர வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

### நோய்த் தடுப்பு பொருட்கள்

கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமை குறித்தும் அங்கு அவசரமாகத் தேவைப்படுகின்ற அத்தியாவசிய தேவைகள் குறித்தும் அவர் அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே இந்த கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கென 24 ஆயிரம் கிலோ மலத்தியனும் அதனைத் தெளிப்பதற்குரிய மேலதிக தெளிகருவிகளையும் 12 ஆயிரத்து 500 கிலோ குளோரினையும் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் பல்வேறு நோய்களினால் பீடிக்கப்பட்டு. பாதிக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு நடமாடும் வைத்திய சேவை அளிப்பதற்காக 5 வாகனங்களையும் 3 அம்புலன்ஸ் வண்டிகளோடு வைத்திய அதிகாரிகள், போதிய அளவு மருந்துவகைகளையும் தந்துதவ வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களுக்கு மேலாகவே திரவப் பணத்திற்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அரச ஊழியர்கள் தமது சம்பளக் காசோலைகளை மாற்றி ரொக்கப் பணமாக்க மேலும் தமது அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக தமது சேமிப்புக் கணக்குகளிலுள்ள பணத்தை வங்கியிலிருந்து மீளப்பெறமுடியாமலும் உள்ளது என்று அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அளவை அதிகரிக்க கோரிக்கை

பணத்தட்டுப்பாட்டை நீக்க, கஷ்ட நிலைமையை இல்லாமல் [illegible]

இலங்கை வங்கியின் கிளிநொச்சி கிளைக்கு 4 கோடி ரூபாவையும் மக்கள் வங்கியின் கிளிநொச்சி கிளைக்கு ஒரு கோடி ரூபாவையும் அனுப்பி வைக்குமாறும் அவர் வேண்டியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சரின் உரிய அனுமதியோடு தொண்டர் நிறுவனங்களின் ஊடாக வவுனியாவில் இருந்து இந்த திரவப்பணத்தை கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்கலாம் எனவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கு அடிக்கடி தேவைப்படுகின்ற இடம் பெயர்ந்தவர்கள் சம்பந்தமான விபரங்களை உடனுக்குடன் அனுப்பி வைக்கவும் உடனுக்குடன் உரிய அறிவுறுத்தல்களை பெற்றுக் கொள்வதற்கும் உதவியாக தொண்டர் நிறுவனத்தின் மூலமாக தொலைத் தொடர்பு கருவி ஒன்றினை கிளிநொச்சியில் பொருத்தலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அதிகரித்துச் செல்கின்ற இடம் பெயர்ந்த மக்கள் சனத் தொகை என்பவற்றிற்கு ஏற்ப அங்கு அனுப்பி வைக்கப்படுகின்ற உணவு மற்றும்அத்தியாவசிய பொருட்களின் அளவினை அதிகரித்து அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

### பாவனைப் பொருட்கள்

கிளிநொச்சி மாவட்டத்திற்கு சூரியக்கதிர் நடவடிக்கை காரணமாக மட்டும் 42 ஆயிரத்து 758 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 68 ஆயிரத்து 818 பேர் யாழ் குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ளார்கள். இந்த மாவட்டத்தில் குடியிருந்து வருகின்ற பிரதேசவாசிகள் என்போர் உட்பட மாவட்டத்தின் முழு சனத்தொகைக்கும் உணவளிப்பதற்காக அரிசி, மா, சீனி, பருப்பு, பாலுணவு, மண்ணெண்ணெய் உட்பட அத்தியாவசிய பாவனைப் பொருள்கள் என்பன 650 லொறிகள் அளவு மாதாந்தம் தேவைப்படுவதாகவும் அதனை அனுப்பிவைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் கோரியுள்ளார்.

# மடல் வழிச் செய்திகள்

## உயிருடன் விட மாட்டேன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து ''கா'' என்பவர் சென்னையில் உள்ள பாபு என்பவருக்கு எழுதியுள்ள ஒரு கடிதம்.

நாங்கள் நலம் என்று கூறுவதற்கில்லை சந்தி வெளியில் பெரியதாக்குதல் ஒன்று நடந்தது. இந்தச் சம்பவத்தில் தமிழ் மக்கள் பலர் இறந்து போனார்கள். இதன் காரணமாக ஒரே பயமும் பதட்டமாகத்தான் இருக்கிறது.

இருதயபுரம் என்ற இடத்தைச் சுற்றி சிங்கள இராணுவத்தினர் பல முகாம்களில் இருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி அங்குள்ள வீடுகளை சோதனை செய்கிறார்கள். அத்தோடு அங்குள்ள மக்களிடம் கூறுகிறார்களாம். எங்களுக்கு ஏதாவது ஒன்று நடந்து விட்டால் இங்கு ஒருவரையும் உயிருடன் விட்டு வைக்கமாட்டோம் என்று அடிக்கடி அச்சுறுத்துகிறார்களாம். இதனால் இரவு பகல் எந்த நேரமானாலும் எப்பவும் எங்களுக்கு பயம்தான்.

## நீங்கள் இங்கு வரவேண்டாம்

யாழ்ப்பாணத்தில் இருந்து ''ரு'' என்பவர் சென்னையில் உள்ள ''சி'' என்பவருக்கு 30-11 95 எழுதியுள்ள மற்றொரு கடிதம்.

தாங்கள் இங்கிருந்து கடிதம் போடவில்லை என்று கோவிக்க வேண்டாம். இங்கு சரியான பிரச்சனை. யாழ்ப்பாணத்தில் எல்லோரும் இடம் பெயர்ந்து விட்டார்கள். எங்கள் அம்மா அவையள் எங்கே என்று ஒன்றும் தெரியவில்லை. கடிதத் தொடர்பும் இல்லை.

திருமலையிலும் சரியான பிரச்சனை வெளியில் போக முடியாது ஆமிக்காரர் பிடிக்கிறார்கள். நீங்கள் இப்ப இவ்விடம் வர நினைக்க வேண்டாம்

கமலா அச்சாவையள் கோப்பாயில்தான் இருந்[illegible] கள் அவர்கள் இருந்த இடத்தில் ''ஷெல்'' வி[illegible] 1-10-95 அவர் இறந்து விட்டார். எங்கள் தம்[illegible] மூதூரில் இறந்து விட்டார் ''பொடி'' கிடைக்கவில்லை[illegible] எங்களுக்கு சரியான கவலை. தம்பியைப் பார்க்க கிடைக்கவில்லை. அம்மா ஒரே அழுதபடிதான். எல்லாம் கடவுளின் சோதனைதான்.

தொகுப்பு: ஆர். [illegible]

www.padippakam.com



# குயுக்தியார் பதில்கள்



சென்னையில் ஆயத்த ஆடைகள் பிரிவில் கழக மகளிர் அணியினர் விற்பனையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் காட்சி.

**யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. * இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது வாசகர்களே! குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.**

வி. ஜெயசக்திவேல், பரமத்தி.

கேள்வி : 21-12-95 'தினமணி' செய்தி மூலம் அகதிகள் கைவினைப் பொருள் கண்காட்சி ஈழ ஏதிலியர் மறு வாழ்வுக் கழகத்தின் சார்பில் சென்னையில் நடந்ததாயும், நடிகை ராதிகா அதைத் திறந்து வைத்ததாயும் அறிந்தேன். இன்றையப் போலியான-மோசமான சினிமா மோகத்தினால் ஏற்பட்டிருக்கும் சீரழிவுகள் கொஞ்சமல்லவே! அதனால்தான் நாம் முகாம்களில் மாணவர்கள் மத்தியில் சினிமா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளைத் தவிர்த்து வருகிறோம். கழகத்தின் நிலையும் அதுவென்றே கருதுகிறேன். அப்படியிருக்கும் போது இதுபோன்ற நிகழ்ச்சிக்கு முன் மாதிரியானவர்களை அழைத்திருக்கலாம். அதை விட்டு சினிமா நட்சத்திரத்தை அழைத்தது ஏன்?

பதில் : நடைபெற்றது விற்பனைக் கண்காட்சி. பண்பாட்டு நிகழ்ச்சியல்ல, விளம்பரம் வேண்டிய அதற்கு விளம்பரமான ஒருவரை அழைத்தது குற்றமாகாது. முரண்பாடுமாகாது.

ஆர். ரவூப்-சேலம்-7.

கே : இ.தொ.கா. தலைவர் அமைச்சர் தொண்டமான் முன்பு வெளியிட்ட அறிக்கைக்கும்அண்மையில் வெளியிட்ட அறிக்கைக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளதே ஏன்?

ப : சூழ்நிலைதான் காரணம். தொண்டமான் போன்ற தலைவர்கள் இனப் பிரச்சினை தீர்வுக்கு இந்தியத் தலையீட்டைப் பெற இன்னும் அதிக முயற்சி மேற் கொள்வது நல்லது.

கே : யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வரை சந்திரிகா வெளிப்படுத்திய உணர்வுகளுக்கும், அது அரசின் கட்டுப்பாட்டுக்கு வந்த பிறகு அவர் பேசும் பேச்சுக்களுக்கும் மிகுந்த வேறுபாடு தெரிகிறதே?

ப : தோல்வி பயத்தில் நிதானம். வெற்றி இறுமாப்பில் மிரட்டல்.

தே. கந்தவேள்-மதுரை-9.

கே : யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளை ஒழித்துக் கட்டியதைப் போல கிழக்கு மாகாணத்திலிருந்தும் அவர்களை விரைவில் ஒழித்துக் கட்டி விடுவோம் என்று, சிறீலங்கா ராணுவ மந்திரி கூறியிருக்கிறாரே?

ப : யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றியதுதமிழ்ப் பொதுமக்களை. அது போல கிழக்கிலங்கையிலிருந்தும் வெளியேற்றி விடுவோம் என்கிறாரோ என்னவோ! ஏனெனில், கொரில்லாப் போராளிகளை ஒழித்துக் கட்டியதாக வரலாறில்லை. அதே நேரம் நன்கு கட்டப்பட்ட ஒருஇராணுவத்தை அண்டை நாடுகளின் பகையையும் சம்பாதித்துக் கொண்டு கொரில்லாப் போர் மூலம் வெற்றிகொள்ள முடியும் என்பதும் அதீத நம்பிக்கையாகும்.

தி. பாண்டுரங்கன்-ஆரணி

கே : முன்பு யாழ்ப்பாணத்துக்கு சிறீலங்கா பொருளாதாரத்தடை விதித்ததற்கே தலையிட்டு, தமிழ் மக்களைக் காக்க இராணுவத்தை அனுப்பிய இந்தியா, இப்போது சிறீலங்கா யாழ்ப்பாணத்திலிருந்தே தமிழ் மக்களை விரட்டியடித்தும் கூட மவுனம் சாதிப்பது சரியா?

சரியல்லதான். அதே வேளை எல்லாத் தமிழ் மக்களும் ஒன்றுபட்டு அன்று போல் இந்தியாவின் தலையீட்டைக் கோரவில்லையே!

*கே : சந்திரிகாவின் புதிய நகல் திட்டத்தையும் கூட நேரடியாக நடைமுறைப் படுத்த முற்படாமல், தெரிவுக் குழுவுக்கு அனுப்பியிருப்பது ஏன்?

ப : மேலும் சில வருடங்களை அதன் பரிசீலனை என்ற பெயரால் ஓட்டவும், தமிழ் மக்கள் ஏற்க முன் வரவில்லை என்று கூறி அப்புறம் குப்பைக் கூடையில் தூக்கி வீசவும் தான்!

ஐ. கே. பூலோகசிங்கம்-கண்டரமாணிக்கம்

கே : தாம் விடுதலை கோரிய மண்ணில் தம் மக்கள் இல்லாத போதும் அரபாத் ஒரு பாலஸ்தீனை அமைத்து விட்டார். ஈழத்திலோ விடுதலைப் போராட்டம் என்று இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து கூட தமிழ் மக்கள் வெளியேற வேண்டியதாகி விட்டதே?

ப : என்ன செய்வது! அரபாத்தின் பின்னால் 23 அரபு நாடுகள் நின்றன. நமது போராளிகளோ இருந்த இந்தியாவைக் கூட சிறீலங்காவின் பக்கம் வலிந்து தள்ளி விட்டார்களே!

கே : யாழ்ப்பாணம் போனது போனதுதானா?

ப : எங்கே போனது நம் யாழ்ப்பாணம்? கடைசித் தமிழன்உள்ளவரை, அண்டையில் தமிழ்நாடு இருக்கும் வரை சிங்களன் தமிழ்ப் பூமியைப் பிடித்தாலும் தக்க வைத்துக்கொள்ள முடியவே முடியாது.

சி. ஆறுமுகம்-விழுப்புரம்

கே : தாயக விடுதலை கோரி நடந்த போராட்டங்கள் அனைத்திலும் தமிழீழ விடுதலைப் போராட்டமே குறுகிய நாளில் பெருகிய தியாகத்தைச் செய்திருக்கிறது. அப்படியிருந்தும் உலகத்தின் ஒரு நாட்டின் ஆதரவைக் கூட அடைய முடியவில்லையே?

ப : யார் சொன்னது அப்படி? இந்தியா கொடுத்த ஆதரவு சாதாரணமானதில்லையே? ஆனால் அதைத் தொடர்ந்து மேற் செல்லாமல் பிரேமதாசா வீசிய வலையில் விழுந்து வீணாக்கி விட்டதற்கு யார் என்ன செய்ய முடியும்?

கே : இனப் பிரச்சினையில் எந்த நாட்டின் மத்தியஸ்தத்தையும் ஏற்க மாட்டோம் என சிறீலங்கா அடம் பிடிக்கிறதே?

ப : இந்தியா முன் வந்தால் அந்த அடம் தானே அடங்கி விடும்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றம் விளம்பரமாகியிருக்கும். அப்படியான குந்திக் கொண்டிருந்த பெண் விழிகள் என்னைப் பார்த்திருக்குமா? என்று தனக்குள்ளேயே குழம்பிப் புலம்பிக் கொண்டிருந்தான்.

''சீ...ஒரு ஆண் எனக்கே இப்படியெல்லாம் ஒரு ருசி கெட்ட தன்மை ஏற்படும் போது அதுவும் தினமும் அலங்கரிக்கும் பொருட்களை வாங்கி அழகுக்காகவே அழகுக்கென்று சொல்லியேவளர்க்கப் பட்டு வரும் பெண்களுக்கு இந்த நிலை எவ்வளவு பாதித்திருக்கும்'' என்று தனக்குள்ளேயே நினைத்துப் பார்த்தான்.

ஆண்களுக்கு மலமிருப்பதற்கு மட்டும்தான் கக்கூஸ் தேவை பெண்களுக்கு இயற்கை உபாதைகளுக்கும் வழியாயிருப்பது மலசலகூடமென்று இனிமேலும் யாருக்கு புரியவைக்கவேண்டும்? யாரிடம் போய்ச் சொல்ல வேண்டும்? எதுவும் தெரியாமல் முன்னால் இந்தக் கேள்வி பெரிதாகயிருந்தது குமாருக்கு விடிந்தது, வானம் கரியைத் துடைத்துக் கொண்டிருந்தது. நிலம் அதிகமாய் மலத்தால் விதைக்கப்பட்டிருந்தது. நாற்றங்கள் மனிதர்களை சூழ்ந்து கொண்டு இருக்கின. விடிவதற்குள் அகதிகளின் அவசரங்கள் தெரிந்தன. சிறியவர்கள் தாங்கள் குந்திக் கொள்வதற்கு இடமில்லாமல் தேடிக் கொண்டிருந்தார்கள். அழுக்குப் பன்றிகள் முகாமைச் சூழ்ந்து கொண்டுவிட்டன.

இயற்கைச் சூழல் மனிதர்களால் தன் கழுததில் தூக்குக் கயிற்றைப் போட்டு அழுது கொண்டிருபது யாருக்கும் தெரியவில்லை.




ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சார்பில் சென்னையில் நடந்த அகதி மக்கள் கைவினைப் பொருட்களின்

www.padippakam.com





சென்னை அகதிகள் கைவினைப் பொருட்கள் கண்காட்சியைப் பார்வையிட வந்த நடிகர்கள் தியாக ராஜன், பிரசாந்த் ஆகியோருடன் கழக நிறுவனர், செயலாளர் மற்றும் மருத்துவப் பிரிவின் தலைவர் டாக்டர் திருமதி தேவராசா.

# கழக நிறுவனரின் பொங்கல் வாழ்த்து:

## வாழ்த்துடன் ஒரு வார்த்தை!

பேரன்புப் பெருந்தகையீர்.

தைப் பொங்கல் தமிழர் திருநாள். 'தைப் பிறந்தால் வழி பிறக்கும்' என்று நன்னம்பிக்கையூட்டி, நல்லொளி கூட்டும் பொன்னாள்! உறவை வளர்க்கும் நன்னாள்!

தமிழர் என்போர் உலகில் எங்கே வாழ்ந்தாலும் ஒரு மிக்கக் கொண்டாடும் சாதி மத வேறுபாடு கடந்த தமிழ்த் தேசிய விழா!

என்றாலும் 1983ம் ஆண்டு தொட்டுத் தொடர்ந்து வரும் இனப்படுகொலையால், ஈழத் தமிழினம்இதைக் கொண்டாட முடியாத இன்னலில் தவிப்பதை உலகம் அறியும்.

அதிலும் இந்த ஆண்டு யாழ்ப்பாணத்திலே கூட தமிழர்கள் இடம் பெயர்ந்து, சொந்த மண்ணிலேயே அனாதைகளாகத் தவிக்கும் சோக நிலை. உலகம் முழுவதுமோ அகதிகளாக உழலும் அவல நிலை. அரசியல் உரிமை கோரி விடுதலைப் போராட்டத்தில் இறங்கிய எம் இனம், இன்று அடிப்படை மாந்தநேய உரிமைக்காகவும் உலக சமுதாயத்தின் ஆதரவைக்கோரி நிற்கும் இரங்கத்தக்க நிலை.

ஈழத் தமிழர் நிலை இதுவென்றாலும், ஏனையத் தமிழ் மக்களுக்குப் பொங்கல் இல்லையென்றாகி விடாது. எனவே தங்களின் மங்கலப் பொங்கல் எங்கும் எதிலும் நிறையட்டும் என்று வாழ்த்துகிற அதே வேளை-

இலங்கையில் உடனே போர் நிற்கட்டும்

சிங்களப் படைகள் தமிழ் மண்ணை விட்டு விலகட்டும்.

தமிழ் மக்கள் தற்போது புகலடைந்திருக்கும் தென் மராட்சிப் பகுதி பாதுகாப்பு வலையமாக பராமரிக்கப்படட்டும்.

இனச்சிக்கல் தமிழ் மக்கள் விரும்பும் வண்ணம் அமைதி வழிவில்-தீர்க்கப்படட்டும்.

இலங்கையில் சிறீலங்காவும், தமிழீழமும் சமாதான முறையில் சகவாழ்வு வாழ உலக நாடுகள் வழி செய்யட்டும். இந்தியா துணை புரியட்டும்.

உலகமெங்கும் தமிழின உணர்வு இம்முறையில் திரும்ப, ஈழத் தமிழினத்தின் எதிர்காலம் ஒளிமயமாக அரும்ப,உங்கள் உள்ளங்களும் உள்ளுவதாக என்று கூறி உளமார்ந்த பொங்கல் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து' —தமிழ் மறை

என்றும் தங்கள்
சா. செ. சந்திரகாசன்
தலைவர்
ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம்
3ம் மாடி, 14, சேட் குடியிருப்பு,
முதல் தெரு, சென்னை-600 008

# சந்திரிகாவின் சுயரூபம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு ஈழத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும்; மறுவாழ்வுக்கும் கூட இந்தியா உத்தரவாதம் கொடுத்தது.

எனவே, அந்த ஏற்பாடு குலையாமல் காக்கப்படுவதில் இன்றும்கூட இந்தியாவுக்குத் தார்மீகப் பொறுப்பு இருக்கிறது.

சந்திரிகாவோ, தனது தற்போதையத் திட்டத்தின் மூலம் முதலில் இந்தியாவுக்குள்ள அந்ததார்மீகப்பொறுப்பைஇல்லாமல் செய்வதிலேயே அதிகக் கவனம் செலுத்தியிருக்கிறார். தானகூட யாழ்ப்பாணச் சண்டைக்கு முன்னர் அறிவித்திருந்த நகல் திட்டத்திற்கு முற்றிலும் விரோதமாக இத்திட்டத்தை இதன் பொருட்டே அறிவித்திருக்கிறார்.

மாகாண எல்லைகளைத் திருத்தியமைப்பது என்கிற பெயரில் தமிழர் தாயகத்தை இல்லாமல் செய்துவிடச் சதி புரிகிறார். இந்த நகல் திட்டத்தைக் கூட தெரிவுக் குழுவின் பரிசீலனைக்கு விட்டு விட்டார். பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிசீலனை எப்படி இருக்கும் என்ற அனுபவம் ஏற்கனவே தமிழ் மக்களுக்கு நிறைய உள்ளது.

முன்பு அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முன் சிங்கள மக்களின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சி (UNP), சிறிலங்கா சுதந்திரக்கட்சி (SLFP) ஆகியவை கூட தங்களின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான திட்டத்தைச் சமர்ப்பிக்கவில்லை.

ஆக, தெரிவுக் குழு முன் பிரச்சினையை விடுவதென்பது தீர்வுக்கானவழியல்ல என்பதே மெய்யாகும். பாராளுமன்றத் தெரிவுக்குழு என்பதும் பெரும்பாலும் சிங்களவர்களைக் கொண்டே அமைக்கப்படுவதால் அங்கே தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கும் என்பது எண்ணிக்கூடப் பார்க்க முடியாத தாகும்.

உள்ளபடி இந்தியா உறுதிப் படுத்திய இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை உருக்குலைப்பதற்காகவே இப்புதிய நகல் திட்டம் சந்திரிகாவால் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதால், இதில் இந்தியா தலையிட வேண்டும்.

### கல்கத் சொன்னதும் இன்று நடப்பதும்

ஏனெனில், 1. இந்தியாவால் ஏற்படுத்தப்பட்ட தமிழ் மாநிலத்தை அழித்தொழிக்காமல் காப்பாற்றியாக வேண்டும்.

2. இந்திய அரசு முன் வைத்த அ) அரசியல் ரீதியான தீர்வு, ஆ) தமிழ் மக்களின் உயிர்ப் பாதுகாப்பு என்ற இரண்டையுமே சந்திரிகா தன்னிச்சையாக முறித்துப் போட்டு விட்டார்.

இந்திய அமைதிப்படை இலங்கையில் நின்ற காலத்தில் அதன் தளபதி கல்கத் அவர்கள் அன்று சொன்ன ஒரு கருத்து இன்று இங்கே எண்ணிப் பார்க்கத் தக்கதாகும். ''மக்களுக்கு இடையூறு விளையாமல் அமைதிப்படை தன் கடமையைச் செய்ய வேண்டியிருந்தது. எத்தகைய எதிர்த் தாக்குதலைச் சந்தித்த போதும் மக்களுக்கு எதிராக நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது என்பதில் நாங்கள் கண்டிப்பாக இருந்ததாலேயே எங்களுக்குச் சில பின்னடைவுகள் ஏற்பட்டன.'' என்று கூறியிருந்தார். சந்திரிகாவின் படைகளோ மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் கண் மூடித்தனமாகத் தாக்குதல்களை நடத்தியது. அப்படிச் செய்து ''இந்திய அமைதிப்படையால் முடியாததை நாங்கள் சாதித்து விட்டோம்'' என்று கூறி, அதிலும் இந்தியாவை மட்டம் தட்டுவதிலேயே குறியாக இருந்தார். அப்படிப்பட்ட ஒரு இனப் படுகொலைப் போரை நடத்தி, யாழ்குடா நாட்டிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றி, அகதிகளாகி விட்ட அவர்களுக்கு மறுவாழ்வு வசதிகளைச் செய்து கொடுக்கக் கூட மறுக்கிறார். மறுவாழ்வு வசதிகளைக் கோரும் தமிழ் மக்களை தம்முடைய எல்லைக்குள் வரும்படி நிர்ப்பந்திக்கிறார். அதாவது அரசின் தயவில் வாழ முடியுமானால் வாழுங்கள் அல்லது ஒழிந்து போங்கள் என்று சொல்லாமல் சொல்கிறார். தமிழ் மக்களைச் சந்தியிலே நிறுத்தி வைத்து தாம் கொடுப்பதை ஏற்றுத் தான் ஆக வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப் பார்க்கிறார்.

### தோலுரிந்த சுயரூபம்

யாழ்ப்பாணத்தைப் புலிகளிடமிருந்து கைப்பற்றும் முன்பு அவர் அறிவித்திருந்த அதிகாரப் பரவல் திட்டத்திற்கும்தற்போதையத் திட்டத்திற்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது. மாகாண எல்லைகள் திருத்தியமைப்பு போன்ற சிலவற்றைத் தவிர, அதில் பல முற்போக்கான அம்சங்கள் இருந்தன. இப்போதைய நகல் திட்டத்திலோ சிறீலங்காவின் பெயரில் இருந்த சனநாயகமும் சோசலிசமும் கூடப் போய் விட்டன. அதாவது இனிமேல் எங்களிடம் சனநாயகமும் கிடையாது, சமத்துவமும் கிடையாது சிங்கள பௌத்தப் பேரினவாத சர்வாதிகாரம் மட்டுமே உண்டு என்று பறைசாற்றி விட்டார். முந்தைய நகல்திட்டம் உலகை ஏமாற்றுவதற்காக மட்டுமே அறிவிக்கப்பட்டது என்பதையும் அம்பலப்படுத்திக் கொண்டு விட்டார்.

தமிழ் மக்களுக்கு எந்த விதப் பாதுகாப்பையும் விட்டு வைக்காமல், சிங்கள இனவாதிகள்கோரியதையெல்லாம் ஒன்று படுத்தி ஒரு நகல் திட்டத்தை முன் வைததன் மூலம் சந்திரிகா தன் சுயரூபத்தை உலகுக்குக் காட்டி விட்டார்.

அந்த சுயரூபம் தமிழ் மக்களுக்கு மட்டுமின்றி, இந்தியாவுக்கும் எதிரிடையானது என்பதால், இந்தியா உடனடியாக இலங்கைத் தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

சந்திரிகாவின் நோக்கம் புலிகளை ஒடுக்குவது மட்டுமல்ல என்பது அவர் அறிவித்துள்ள இத் திட்டத்தின் மூலம் புலனாவதால், புலிகளின் பொருட்டு ஒதுங்கி நில்லாமல் தமிழ்ப் பொது மக்களைக் காக்க இந்தியா ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு, ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN, No 14, Sait Colony, Ist Street, IIIrd Floor, Egmore, Madras-600008.
Printed at Kuralnery Achagam, Madras-94.